
ராணி முத்து
பெ.நாயகி
திகில் இரவுகள்
ரூ.5
16.7.02

# திகில் இரவுகள்

## பெ. நாயகி

## 1

இன்ஸ்பெக்டர் அருண் சாப்பாட்டு மேசை முன் உட்கார்ந்திருந்தான்.

மேசை மீது ஆவி பறக்கும் இட்லி.

அருகிலிருந்த கிண்ணத்தில் தாளித்த தேங்காய்ச் சட்னி மணம் கமழ்ந்தது. இட்லிப் பொடியும் நல்லெண்ணெயும் அருகருகே தயாராய் இருந்தன.

அனைத்தையும் பார்த்தவன், "அம்மா..." என்று குரல் எழுப்பினான்.

"நான் இங்கேதானே இருக்கேன்? உங்க அம்மா வந்துதான் எடுத்து வைக்க வேண்டுமோ? சரியான அம்மா பைத்தியம்" என்று, குரலில் பொய்க் கோபம் காட்டி உதடு சுழித்தாள், எதிரே உட்கார்ந்திருந்த தேவி. அருணின் மனைவி.

நிமிர்ந்து அவளைப் பார்த்துப் புன்னகைத்த அருண், "உன் வேலையைப் பார்... உனக்குன்னு நான் கொடுத்திருக் கிறதைச் செஞ்சா போதாதா? இன்னும் அதையே தடவிட்டு இருக்கிறே... இந்த இலட்சணத்துல வினய பேச்சுக்கு மட்டும்

குறைச்சல் இல்லை" என்றபடி, அவள் தலையைத் தட்டினான்.

"எதுக்குடா என் மருமகளை அடிக்கிறே? இந்த அடிக்கிற வேலையெல்லாம் போலீஸ் நிலையத்தோடு வச்சுக்கோ, ஆமாம்" என்றபடி உள்ளறையிலிருந்து ஒரு கையில் தட்டுடனும், இன்னொரு கையில் தண்ணீர் ஜக்குடனும் வெளிப்பட்டாள், அம்மா சாந்தா.

## குட்டிப் பேருந்து

தமிழ்நாட்டில் முதல் முதல் குட்டிப் பேருந்துகள் விடப்பட்டது, கன்னியா குமரி மாவட்டத்தில்தான்!

"சரிம்மா... உத்தரவு" என்ற அருண், "சீக்கிரம்மா" என்று தாயைத் துரிதப்படுத்தினான். திரும்பி தேவியைப் பார்த்து, "என்ன தேவி! நான் சொன்னமாதிரி எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திட்டியா?" என்று கேட்டான்.

தேவி இன்னமும் குழம்பிக் கொண்டிருந்தாள்.

"என்ன செய்யுறே தேவி?"

"அத்தை... எல்லா பத்திரிகைகளில் இருந்தும் நரபலி சம்பந்தமான செய்தியைக் கத்தரித்து தேதி வாரியாக வரிசைப்படுத்தி வைக்கச் சொன்னார். அதுதான்..."

"நரபலியா? பத்து பதினஞ்சு நாளுக்கு முன்னால யாரோ நாகம்மான்னு..."

"உம்... அந்த விஷயம்தான்..."

சாந்தாவின் முகம் போனபோக்கை ஓரக்கண்களால் கவனித்த அருண், சட்டென்று பேச்சை மாற்ற விரும்பியவனாக, "என்னம்மா இது இட்லியா? யார் மேலாவது ஓங்கி எறிஞ்சா பொட்டுன்னு உயிர் போயிடும் போலிருக்கே..." என்றான், சிரித்தவாறு.

"ஆமாடா... நானும் நினைச்சேன். கிரைண்டர் சரியில்லை... அடுத்த தெருவுல கொடுத்து அரைச்சு வாங்கினேன். மாவு சரியில்லை" என்றாள் சாந்தா.

## பழையாறு

தமிழ்நாட்டின் தென்கோடியில் இருந்த பறுளி ஆற்றைக் கடல் கொண்டதாகத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

குமரி மாவட்டத்தில் இப்பொழுது பழையாறு என்ற ஆறு ஓடுகிறது. இதன் பழைய பெயர் பரலி ஆறு. இந்த ஆறு தான் பறுளி ஆறாக அன்று இருந்து இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

"இந்த மாதிரி இட்லி வச்சிருந்தா போலீஸ்காரன் வீட்டுலேயே பயங்கரமான ஆயுதமெல்லாம் இருக்குன்னு சொல்லி விவகாரம் பண்ணிடப் போறாங்க..."

"போடா... எப்பவும் போலீஸ்காரனா பேசாதே... வீட்டுலயாவது மகனா இரு..."

"என்ன பெரிய போலீஸ்காரன். உன் மருமகளைப் பார்... நான் ஊர்ப் பயல்களைப் பிடித்து உள்ளே போடுறேன். அவ என் மகனையே பிடிச்சு வயித்துக்குள்ளே அடைச்சு வைத்துக்கொண்டு விடுதலை பண்ணமாட்டேங்கிறா... கேட்டா இன்னும் இரண்டு மாதம் ஆகணுங்கிறா..."

தேவிக்கு பூரிப்பில் முகம் சிவந்தது. வலதுகை அவளையும் அறியாமல் வயிற்றைத் தடவிக் கொடுத்தது.

தேவியைப் பார்த்தான், அருண். ஏற்கனவே சிவந்த மேனி. இப்போது பூரிப்பில் கனிந்து போய்ப் பேரழகுடன் புன்னகை செய்தாள்.

"அதைப்பற்றி நீ பேசாதேடா... ஒருமுறையாவது ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போய் காட்டி இருப்பியா? வக்கீல் இல்லாத கைதிக்கு விடுதலை தள்ளிப் போகத்தான் செய்யும்."

படபடவென்று கைகளைத் தட்டினாள், தேவி.

"கை கொடுங்க அத்தை! சபாஷ்! இப்போ நீங்க ஒரு போலீஸ்காரரின் அம்மாங்கிறதை நிரூபிச்சிட்டீங்க" என்று

கலகலவெனச் சிரித்தாள்.

"எல்லாம் பேரன் வர்ற தைரியம். அம்மாகூட புத்திசாலித்தன்மா பேசத் தொடங்கிட்டா" என்ற அருண் அப்படியே தேவியிடம் திரும்பி, "உம்... இதைப் படி" என்றான் அவள் கையிலிருந்த பத்திரிகை செய்தியைச் சுட்டிக்காட்டி.

தேவி எடுத்து வாசித்தாள்.

**"தமிழ்நாட்டில் மீண்டும் நரபலி!**
**கர்ப்பிணிப்பெண் கோரக் கொலை!**
**மதுரையில் நடந்த பயங்கரம்!"**

"கொஞ்சம் இரும்மா..." என்ற சாந்தா, "இப்போ எதுக்குடா இதையெல்லாம் அவளை வாசிக்கச் சொல்றே?" என்றாள், குரலில் பதற்றம் காட்டி.

"ஏம்மா?"

"அறிவு கெட்டவனே! அதில் கர்ப்பிணி— கொலை அது இதுன்னு வருது... அவளைப் போய் வாசிக்கச் சொல்றியே"

## தென் திருவிதாங்கூர்

**நா**கர்கோவிலில் உள்ள பழம்பெருமை மிக்க கல்லூரி, தெ.தி. இந்து கல்லூரி. எத்தனையோ ஆன்றோர்களையும், சான்றோர்களையும் உருவாக்கி, ஆலமரம் போல் அந்தக் கல்லூரி இன்றளவும் பீடு நடை போட்டுக்கொண்டிருக்கிறது.

கல்லூரியின் பெயரில் வரும் "தெ.தி." என்பது தென் திருவிதாங்கூர் என்பதைக் குறிக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தின் பழைய பெயர், இது. இந்த மாவட்டம் கேரளாவுடன் இணைந்து இருந்தபோது, "தென் திருவிதாங்கூர்" என்றே அழைக்கப்பட்டது.

*—ரெ. கங்காதரன், தஞ்சாவூர்.*

என்றாள், கடிந்துகொள்ளும் குரலில்.

அருண் சிரித்தான்.

"தேவி உனக்கு பயமா இருக்கா?"

"சேச்சே... அதெல்லாம் இல்லை..."

"பார்த்தியாம்மா... நீ இன்னும் அந்தக் காலத்துலேயே இருக்கிறே... தேவி இந்தக் காலத்துப் பொண்ணு... அவளே பயப்படலை... நீ ஏன் பயப்படுறே? அவள் சுமக்கிறது என் மகனை.. அவன் உள்ளே இருக்கும்போதே வெளிஉலகம் எப்படி இருக்குன்னு தெரிஞ்சுட்டு வரட்டுமே... அப்போதான் தன் அப்பா எவ்வளவு தைரியசாலி, திறமைசாலின்னு பெருமையோடு பிறப்பான்..."

"போதும் சுயபுராணம்" என்று வெட்டினாள், தேவி.

"நான் தைரியசாலி திறமைசாலின்னு உலகமே சொன்னாலும் நீ நம்பமாட்டியே..."

"தெரியும் தெரியும்" என்று பார்வையில் குறும்பு காட்டியவளாக செய்தியைத் தொடர்ந்து படித்தாள்.

".....மதுரையை அடுத்த அழகுசோலைக் கிராமத்தில் வசிப்பவர் பழனியப்பன். வயது முப்பத்தைந்து. கூலி வேலை பார்த்து வருகிறார். இவருடைய் மனைவி நாகம்மா... வயது இருபத்தெட்டு... இவர்களுக்கு எட்டு ஆண்டுக்கு முன் திருமணம் நடைபெற்றது. குழந்தை இல்லாததால் எல்லா தெய்வங்களிடமும் வேண்டிக்கொண்டார்கள்..." என்ற தேவி நிமிர்ந்து, "துணைத் தலைப்புகளையும் படிக்கணுமா?" என்று கேட்டாள்.

"வேண்டாம்... செய்தியை மட்டும் படி..."

"உம்... எங்கே விட்டேன்... ஆங்! வேண்டிக்கொண்டார் கள்... அவர்களுடைய பிரார்த்தனை பலித்தது... நாகம்மா கர்ப்பவதி ஆனாள். பழனியப்பன் மிகுந்த மகிழ்ச்சியில்

இருந்தார். நாகம்மா நிறைமாதமானபோது அந்தத் துய்ர சம்பவம் நிகழ்ந்தது..."

"என்னது...?"

"நாகம்மா திடீரென்று ஒரு நாள் காணாமல் போனாள். முழுக்க தேடிய பிறகும் அவள் கிடைக்காததால் பதறிப்போன பழனியப்பன், போலீசில் புகார் செய்தார். மூன்றாம் நாள் மதுரைக்கு வடக்கே மூன்று கிலோமீட்டர் தொலைவிலுள்ள காளி கோவில் வாசலில் நாகம்மாள் பிணமாய்க் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவள் மிகக் கோரமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தாள்.

தலை தனியாகவும், பாதி குழந்தை வெளிவந்த நிலையில் உடல் தனியாகவும் இரத்தம் தோய்ந்து கிடந்தது. இந்தக் கொடூரம் மதுரையையே உலுக்கி உள்ளது..."

## 2

"சிவ... சிவா..." என்று காதுகளைப் பொத்திக் கொண்டாள், சாந்தா.

"ஏன்டா... சொன்னா கேட்கவேமாட்டியா? இப்படிப்

### மறக்கப்பட்ட வரலாறு

கன்னியாகுமரி மாவட்டம் பல நூற்றாண்டுகளாக திருவாங்கூர் அரசின் ஆட்சியில் இருந்தது. அது தமிழர் வாழ்ந்த பகுதி. ஆதலால், கேரள வரலாற்று ஆசிரியர்கள் குமரி மாவட்ட வரலாறு பற்றிக் கவலைப்படவில்லை!

அது திருவனந்தபுரத்துடன் இருந்ததால், தமிழ்நாட்டு வரலாற்று ஆசிரியர்களும் அந்தப் பகுதியை மறந்துவிட்டார்கள். இதனால் குமரி மாவட்டத்தின் முழுமையான வரலாறு இன்னும் எழுதப்படவில்லை.

பட்ட விஷயங்களைப் பிள்ளைத்தாய்ச்சி இவ்வளவு தீவிரமா படிக்கக்கூடாதுடா... ஏம்மா தேவி... அவன்தான் மூளை கெட்டுப்போய்ச் சொன்னான்னா நீயும் ஏம்மா படிக்கிறே?"

"அம்மா! வயிற்றில் இருக்கும்போதே இப்படி செய்திகளை எல்லாம் கேட்டால்தான் உன் பேரன் தைரியசாலியா வளர்வான்."

"போடா! நீ வயிற்றில் இருக்கும்போது நான் கந்த புராணம்தான் படிச்சேன். நீ தைரியமில்லாமல் போயிட்டியா?"

"நானா? என் தைரியத்தைக் கொண்டுபோய் உடைப்பில் தான் போடணும். ஒரு நாளாவது உன் மருமகளை எதிர்க்கும் தைரியம் எனக்கு வந்திருக்கிறதா?"

தேவி முறைத்தாள்.

"இப்படி ஒரு முறைப்பில் ஆடிப்போய்விடுகிறேனே" என்று சிரித்த அருண் இன்னொரு செய்தியைக் காட்டி, "இதைப் படி தேவி" என்றான்.

"நாகம்மா கொலை... நரபலியா?"

"உம்... படி."

"நாகம்மா என்கிற கர்ப்பிணி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. அவள் பிணம் வெட்டுண்ட நிலையில் காளி கோவிலுக்கு முன் கிடந்தாலும், கொலைசெய்யப்பட்ட விதத்தாலும் அவள் நரபலி கொடுக்கப் பட்டிருப்பாளோ என்கிற சந்தேகம் எழுந்துள்ளது" என்று தொடர்ந்து படிக்கப்போன தேவியிடம் "தேவி! எல்லா வற்றையும் படிக்க வேண்டாம். நான் கோடிட்ட இடங்களை மட்டும் படி" என்றான், அருண்.

"நாகம்மா வீட்டைவிட்டு வெளியே சுற்றும் பெண் அல்ல. எனவே, அவள் கடத்தப்பட்டுதான் கொலை செய்யப்

பட்டிருக்க வேண்டும்.

கொலை நடந்தது அமாவாசை நாளாகும். பிரேத பரிசோதனையில் அவள் அன்றிரவு சுமார் பன்னிரண்டு மணிவாக்கில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தெரிய வந்துள்ளது.

நாகம்மா போட்டிருந்த நகைகள் அப்படியே கிடந்தன. கற்பழிப்பு மாதிரியான முயற்சிகளும் நடந்ததாகத் தெரிய வில்லை.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது இது நரபலியாக இருக்குமோ என்கிற சந்தேகம் எழுகிறது.

எனவே, கர்ப்பிணிப் பெண்கள் குறிப்பாக தலை பிரசவத்திற்குத் தயாராகும் பெண்கள் கவனமாக இருக்கும்படி போலீசார் கேட்டுக்கொண்டுள்ளனர்."

சாப்பிட்டு முடித்துக் கை கழுவி எழுந்தான், அருண்.

## யானைச்சார முடுக்கு!

நெல்லையில் இன்று அநேகருக்கு "யானைச்சார முடுக்கு" என்றால் தெரியாது. சர்க்கஸ் யானைகளை இந்த முடுக்கு வழியாகக் கொண்டுபோய் நயினார்குளத்தில் குளிப்பாட்டு வார்கள். ஒரு யானை போகும் அளவிற்குத்தான் இந்த முடுக்கின் அகலம் இருக்கும்.

சில ஆண்டுக்குப் பிறகு இந்த முடுக்கை "டவுன் கிளப் ரோடு" என்று அழைத்தார்கள். அதன்பின் இதன் அருகில் ராயல் டாக்கீஸ் திரைஅரங்கு வந்ததால், "ராயல் டாக்கீஸ் முடுக்கு" என்று பெயர் பெற்றது. இந்த முடுக்கில் நின்றுகொண்டும், பக்கத்து சுவரில் உட்கார்ந்துகொண்டும் ராயல் டாக்கீஸில் நடந்த "கண்ணகி" படத்தின் பாடல்களையும், இளங்கோவனின் வசனங்களையும் அன்றைய இளைஞர்கள் கேட்டு மகிழ்ந்தனர். இப்பொழுது இந்த முடுக்கு "போத்தீஸ் முடுக்கு" என்று அழைக்கப்படுகிறது.

—வெங்கடேஸ்வரன், நெல்லை.

"தேவி! நீ எல்லாச் செய்திகளையும் நன்கு படி. நான் சில கேள்விகளை ஒரு தனித் தாளில் எழுதி வைத்துள்ளேன். அவைகளுக்கு உன் கோணத்தில் பதில் எழுது. மாலையில் நான் வந்ததும் இதுபற்றி விவாதிப்போம்" என்றபடி தேவியின் முந்தானையில் கையைத் துடைத்துக்கொண்டு நகர்ந்தான்.

பனியனில் பிதுங்கித் தெரிந்த கணவனின் புஜங்களின் அழகைப் பெருமையுடன் தேவி பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் சட்டையை எடுத்து மாட்டினான்.

"நான் கிளம்புறேன்" என்று குரல் கொடுத்தான். வாசலில் ஜீப் வந்து நிற்பது தெரிந்தது.

போய்க்கொண்டிருந்த அருணுக்கு எண்ணம் முழுதும் நாகம்மா கொலையில்தான் இருந்தது.

இந்த வழக்கை விசாரிக்கும் இன்ஸ்பெக்டர்கள் இருவரில் அருணும் ஒருவன். அடுத்தவர் விடுப்பில் போயிருக்கிறார்.

அருண் மீதான அதீத நம்பிக்கையில் இந்த விசாரணையை ஒப்படைத்திருந்தனர்.

ஆனால், பதினைந்து நாளாகியும் வழக்கில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லாமல் கண்ணாமூச்சி நடந்து கொண்டிருக்கிறது.

விசாரணை விசாரணை என்று உருப்படி இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. அதுகுறித்த கவலை அருணை அலைக்கழித்துக்கொண்டிருந்தது.

அதனால்தான் தேவியிடம் சில கேள்விகளைத் தந்துவிட்டு வந்திருந்தான்.

அவள் புத்திசாலி. அவளுடைய சிந்தனை வித்தியாசமான திக்கில் பாயக்கூடும்.

பிரச்சினைக்கு சம்பந்தமில்லாதவர்களின் கோணத்தில் யோசிப்பது ஒருமுறை. சிக்கலான வழக்குகள் வரும்

போதெல்லாம் இந்த முறையைக் கையாளுவது அவனது வழக்கம். அதில் அவனுக்கு வெற்றி கிடைத்து இருக்கிறது.

பிரேக் போட்டு நின்றது ஜீப்.

அருண் இறங்கினான்.

போலீஸ் நிலைய வாசலில் கார் ஒன்று நின்றிருந்தது.

> **திருக்குறள் அச்சேற்றியவர்**
>
> திருக்குறளை முதல் முதல் அச்சில் ஏற்றியவர் ஒரு நெல்லைக்காரர்.
>
> அம்பலவாணக் கவிராயர் என்ற அவர், 1812இல் திருக்குறளை அச்சிட்டு வெளியிட்டார்.

அருணுக்குப் பழக்கமான வாகனம்தான் அது. பிரபல வழக்கறிஞர் ரமணியின் கார்.

'அவருக்கு இங்கென்ன வேலை? ஏதும் வழக்கு விஷயமாக வந்திருப்பாரோ?' என்று எண்ணமிட்டபடியே உள்ளே சென்றான். தன் இருக்கையில் அமர்ந்தான்.

எதிரே அமர்ந்திருந்த ரமணியின் முகத்தில் கலவரம் படர்ந்திருந்தது.

## 3

ரமணி என்கிற அந்த இளவயது வக்கீல், மதுரை நகரில் மிகப் புகழ்பெற்றவர். நா வன்மையும் சாதுர்யமும் படைத்தவர். விரல்விட்டு எண்ணத்தக்க மிகப்பெரும் வழக்கறிஞர்களில் ஒருவர்.

அருணுக்கும் அவருக்கும் ஓரிரு வழக்குகள் மூலம் ஏற்பட்ட தொடர்பு, பழக்கமாகி குடும்ப அளவில் நெருக்கமாகி இருந்தது.

தேவியும், ரமணியின் மனைவி காஞ்சனாவும் பள்ளித் தோழிகள் என்பது அந்தப் பழக்கத்தில் தெரியவர, அவர்களும் நெருங்கி இருந்தார்கள்.

ரமணி நேரில் போலீஸ் நிலையம் வந்து அருணைச் சந்திப்பது அரிதான விஷயம். தேவையானதைத் தொலைபேசியில் தெரிந்து கொள்வதுதான் பெரும்பாலும் வழக்கம்.

அந்த வியப்போடுதான் அருண் ஏறிட்டான்.

"என்னாச்சு ரமணி சார்... உங்க முகமே சரியில்லை?"

ரமணி நிமிர்ந்தார். "அருண்! ஒரு முக்கிய விஷயம். என் மனைவியைக் காணோம். நேற்றிலிருந்து ஒரு தகவலும் இல்லை. எனக்கு பயமா இருக்கு."



## பெண் விநாயகர்

எத்தனையோ விநாயகர்கள் இருக்கிறார்கள். ஆனால், பெண் விநாயகர், சுசீந்திரம் கோவிலில் மட்டுமே இருக்கிறார்! ஆம், அங்கே விநாயகர் பெண்ணாக இருக்கிறார். விநாயகி என்று பெயர்!

ரமணியின் குரலில் நடுக்கம்.

அருண் விறைப்பானான்.

ரமணியின் கண்களில் நீர் வழியாத குறை.

"அருண்! என் பயத்தை அதிகரிக்கிற இன்னொரு விஷயம்— அவள் நிறைமாத கர்ப்பிணி."

## தமிழ்நாட்டில் கேரளம்

நெல்லை மாவட்டத்தில், ஆலங்குளம் பக்கத்திலுள்ள ஒரு ஊரின் பெயர் "வீரகேரளம்புதூர்." இதைத் தமிழ்நாட்டுக் கேரளம் என்று கூறுகிறார்கள்.

*—ராதிகா அழகப்பன், விக்கிரமசிங்கபுரம்.*

சுரீரென்றது அருணுக்கு.

'ஆமாம்... அது எப்படி எனக்கு மறந்து போனது? தேவிகூட சொல்லி இருக்கிறாளே.'

ரமணியின் கோலம் அருணை என்னவோ செய்தது.

போலீஸ்காரரைக் கூப்பிட்டு குளிர்பானம் வாங்கிவரச் சொல்லி ரமணியிடம் கொடுத்து அவர் குடித்து முடியும்வரை மவுனம் சாதித்தான், அருண். அதுவரை நேர்ப் பார்வை பார்ப்பதையே தவிர்த்து வந்த ரமணி, மெல்லத் தெளிவடைந்து நிமிர்வதைக் கவனித்தான்.

"சொல்லுங்க" என்றான்.

"காஞ்சனாவை..." என்ற அவரின் குரல் மீண்டும் உடையத் தொடங்கியது.

"நீங்களே இப்படி உடைந்தால் எப்படி? என்னை நிமிர்ந்து பாருங்க. உம்... இப்போ சொல்லுங்க... நேத்துன்னா எப்போ? அவங்க எங்கே போனாங்க? காணோம்னு எப்படி தீர்மானிச்சீங்க? எல்லாம் தெரிஞ்ச நீங்க அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரமாட்டீங்கன்னு நினைக்கிறேன். சொல்லுங்க" என்றான், தன் பதற்றத்தை மறைத்தபடி.

"அருண்! நேற்று காலையில் நான் கோர்ட்டுக்குப் போகவேண்டியிருந்தது. அவ வீட்டில் இருந்தாள். மத்தியானம் வந்திடுவேன்னு சொல்லியிருந்தேன். இரண்டு மணிக்கு நான் போனபோது அவள் இல்லை. வேலைக்காரங்ககிட்ட கேட்டேன். 'அம்மா ஒண்ணும் சொல்லிக்கலை. இதோ

வந்திடுறேன்னு சொன்னாங்க'-என்று சொன்னார்கள்.

"அப்புறம்...?"

"காரில்தான் போயிருக்கிறாள். பஸ் நிலையத்தில் இறங்கிக்கொண்டு டிரைவரை அனுப்பிவிட்டாளாம். நான் இதைத் தப்பா எடுத்துக்கலை. எங்காவது உறவினர் வீட்டுக்குப் போயிருப்பான்னு நினைச்சேன். அவ இரவு வரை வரலைன்ன உடனே கொஞ்சம் பயம் வந்தது."

"நீங்க என்ன செஞ்சிங்க?"

"தெரிஞ்ச எல்லோருக்கும் போன் மூலமாகவும் நேரடியாகவும் சொன்னேன். எங்கேயும் வரலைன்னு சொன்னாங்க. எதுக்கும் காலை வரை பார்த்திடலாம்னு இருந்தேன். வரலை. அதான் இங்கே வர்றேன். உள்ளூர ஏதோ உதைக்குது அருண். கொஞ்சம் பயமாவும் இருக்குது."

அவரைத் தேற்றும் வண்ணம் அவன் பேசினான்.

அவர் அமைதி அடையவில்லை.

"இன்னொரு விஷயம்– அவளுக்கு இதுதான் மாசமும் கூட. என்ன ஆனாளோன்னு மனசு கவலைப்படுது."

"சேச்சே... ஏன் இப்படி பயப்படுறீங்க... ஒண்ணும் ஆகாது. காஞ்சனா படிச்சவங்க. அவங்களுக்கு தன்னை பத்திரமா பார்த்துக்கத் தெரியாதா?"

"அதுக்கில்லை அருண். இப்பதான் கொஞ்ச நாளா..." என்ற ரமணி, "சே... அப்படி எல்லாம் எதுவும் இருக்காது. இருக்கக்கூடாது" என்று தலையை உலுப்பிக்கொண்டார்.

பிறகு அவரே "பயமா இருக்கு அருண். மனம் என்னவெல்லாமோ நினைக்குது" என்றார், லேசாக உடல் நடுங்க.

அவருடைய கண்கள் தூக்கமின்மையால் உட்குழிவிழுந்து இருந்தன. காலையில் குளித்திருப்பாரா என்பதே சந்தேகம்.

அவரைப் பார்க்க அருணுக்கே பாவமாக இருந்தது.

"ரமணி சார்! காஞ்சனாவின் புகைப்படம் ஒண்ணு கொடுங்க. கூடவே புகாரும் எழுதி... உங்களுக்கு இந்த நடைமுறை எல்லாம் தெரியும்னு நினைக்கிறேன்."

"படத்துடன்தான் வந்திருக்கேன் அருண். இதோ புகார் எழுதித் தர்றேன்."

நடுங்கும் கரங்களுடன் எழுதிக்கொண்டிருக்கும் இந்த ரமணியா அவ்வளவு பெரிய வக்கீல் என்று எண்ணிப் பார்க்கையில் வியப்பாக இருந்தது.

குடும்பம், மனைவி என்றெல்லாம் ஆகிவிட்டால் எவ்வளவு பெரிய மனிதனும் இப்படி ஆகிவிடுகிறான். 'தேவிக்கு இப்படி ஏதாவது ஆனால் நான் எப்படி இருப்பேன்?' என்கிற எண்ணம் வர தலையை உதறிக்கொண்டான்.

ரமணியைத் தேற்றி அனுப்பி வைத்துவிட்டு இருக்கைக்கு வந்த அருணுக்குள் புது கேள்வி எழுந்தது.

'நேற்று மாலையில் இருந்து இன்று காலைக்குள் எல்லா நண்பர்களையும் கேட்டேன் என்றாரே... என்னிடமோ, வீட்டில் தேவியிடமோ ஏன் பேசவில்லை?'

மறுகணம் ரமணியின் பதற்றம் கண் முன் வர, அவருக்கு தான் என்ன செய்கிறோம் என்பதே தெரிந்திருக்க நியாய மில்லை என்று அந்தக் கேள்வியை உதறினான்.

## 4

சிறிது நேரம் சிந்தனையில் இருந்த அருண், குமாரசாமி என்கிற காவலரை அழைத்தான்.

"குமாரசாமி! அந்த வெட்டுண்ட காளி கோவில் இருக்கிற

பகுதியில்தானே உங்க வீடு இருக்கு?"

"நரபலி கொடுத்திட்டாங்கன்னு பேரா இருக்கே... அந்தக் கோவில் தானே? ரொம்பப் பக்கம் இல்லை. எங்க வீட்டில் இருந்து கொஞ்ச தூரம் தள்ளி இருக்கு."

## இரட்டை நகரம்

ஐதராபாத், செகந்திராபாத் போல், திருநெல்வேலியும், பாளையங்கோட்டையும் இரட்டை நகரங்கள். இங்கும் ஒரு ஆறுதான் (தாமிரபரணி ஆறு) இரு நகரங்களையும் பிரிக்கிறது.

"அந்தக் கோவில்ல என்ன விசேஷம்?"

"ஒன்றும் கிடையாது சார். போன தடவை வந்தபோது பார்த்தீங்களே. ஏதோ தனியான முள்காட்டுக்கு நடுவே உள்ள பாழடைஞ்ச பழைய கோவில்தான். இன்னும் சரியா சொல்லணும்னா, ஜனங்க யாரும் அந்தக் கோவில் பக்கம் போறதே இல்லை. அதைத் தாண்டி கொஞ்ச தூரத்திலேயே சுடுகாடு இருக்கிறதால பகல்லகூட அங்கே போறவங்க கிடையாது. இப்போ அந்த நரபலி சம்பவத்துக்குப் பிறகுதான் அப்படி ஒரு கோவில் இருக்கிறதே பலபேருக்குத் தெரிய வந்திருக்கு."

"உங்க பகுதி ஜனங்ககூடக் கும்பிடப் போகமாட்டாங்களா?"

"போகிறதில்லை சார்."

"வெட்டுண்ட காளின்னு எப்படி பேர் வந்தது?"

"தெரியலை சார்... அக்கம்பக்கத்துக்காரங்ககிட்ட கூடக் கேட்டுப் பார்த்தேன். யாருக்கும் தெரியலை. பத்திரிகைக்காரங்க செய்தி போடும்போது வித்தியாசமா இருக்கட்டுமேன்னு வச்ச பேராகத்தான் இருக்கும்னு நினைக்கிறேன்."

"சாதாரணமா அந்தக் கோவில்ல பலி கொடுக்கிறது உண்டா?"

"பலின்னா...?"

"ஆடு... கோழி... அப்படி."

"நான் விசாரிச்ச வரையில் எங்க கிராமத்துல யாருக்கும் அது குலதெய்வம் இல்லை. வேற யாருக்காவது குலதெய்வமா இருந்தால் பலி கொடுக்கிறவங்க கோவிலை இப்படி பாழடைஞ்சு போக விடமாட்டாங்களே..."

"அப்போ அது எந்த விதத்திலும் முக்கியத்துவம் இல்லாத கோவில்னு சொல்லலாம்."

"ஆமா சார்."

"ஏன் இப்படியும் இருக்கலாமா?" என்று ஏதோ சொல்ல வாயெடுத்தார், எழுத்தர் கன்னையா.

"என்ன?" என்று நிமிர்ந்தான், அருண்.

கன்னையா என்ன நினைத்தாரோ... தனக்குள் சிரித்துக்



## சரணாலயங்கள்

நெல்லை மாவட்டத்தில் இரண்டு சரணாலயங்கள் உள்ளன. முண்டந்துறை வனவிலங்கு சரணாலயத்தில் புலிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சிறுத்தைப்புலி, கரடி போன்ற மிருகங்களும், இந்திய வகைக் குரங்குகளும் இங்கு ஏராளமாக உள்ளன.

களக்காட்டில் இன்னொரு சரணாலயம் உள்ளது. பறவை இனங்களும், வனவிலங்குகளும் இங்கே அதிக அளவில் உள்ளன. அழிந்து வரும் இனத்தைச் சேர்ந்த சிங்கவால் குரங்கு என்ற அரிய வகைக் குரங்கும் இங்கே உள்ளது. தோற்றத்தில் சிங்கத்தைப் போல் காட்சி தரும் இந்தக் குரங்குகள், அழகு நிறைந்தவை!

கொண்டார். "ஒண்ணுமில்லை சார்" என்றார்.

"சும்மா சொல்லுங்க."

"இல்லை சார்... கேட்டா சிரிப்பீங்க" என்று உள்வாங்கினார்.

ரமணி தந்துவிட்டுப் போன காஞ்சனாவின் புகைப்படத்தை அருண் யோசனையுடன் பார்த்தான்.

நல்ல உடலமைப்பு. தேவி அளவுக்கு இல்லாவிட்டாலும், ஓரளவு நிறம். குடும்பப் பாங்கான முகத்தில் நிறைய அப்பாவிக் களை.

அவளின் கண்களில் தெரிந்த பரிதாப உணர்ச்சி 'என்னைக் கண்டுபிடிச்சிடுவியா அருண்?' என்று கேட்பது போலிருந்தது.

புகாரைப் படித்துவிட்டு மேசையில் போட்டான்.

'மற்ற போலீஸ் நிலையங்களுக்கு தகவல் தரவேண்டும். கூடியவரை ஆரவாரமில்லாமல் காஞ்சனாவைக் கண்டு பிடிக்க வேண்டும். பத்திரிகைகளில் செய்தி வெளியாகி விடக்கூடாது' என நினைத்தான்.

அருணும் தேவியும் இரண்டு முறை ரமணியின் வீட்டுக்குப் போயிருக்கிறார்கள். ஆனாலும், தேவியிடம் அவள் பழகிய விதம் அருணுக்கு தனி மரியாதையை ஏற்படுத்தியது.

அப்பேர்ப்பட்ட பெண் திடீரென்று செய்தித்தாள்களுக்குத் தீனியாவதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

கூடியவரை ரமணி கொடுத்த புகாரைப் பதிவு செய்யாமலேயே காஞ்சனாவைக் கண்டுபிடித்து ஒப்படைக்க வேண்டும் என்று உறுதி செய்துகொண்டான்.

மேசை மீது நாகம்மா சம்பந்தப்பட்ட விசாரணை கோப்புகள்.

ஏற்கனவே பார்த்தவைதான். மீண்டும் ஒருமுறை

## அப்பளம்

நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சி, அப்பளத்துக்குப் பெயர் பெற்ற ஊர். "கல்லிடைக்குறிச்சி அப்பளம்" என்றே சொல்லுவார்கள்.

—ராஜேஸ்வரி, கல்லிடை.

பார்த்தான். புதிதாக ஏதும் தோன்றவில்லை..

அமாவாசை நாளில் நரபலி.

இது மட்டுமே அவன் எண்ணத்தில் ஓடியது. 'பளிச்' சென்று நிமிர்ந்தான்.

"குமாரசாமி..."

"சார்..."

"நீங்களும், பசுபதியும் அந்தக் கோவிலுக்குப் போய்க் காவல் இருங்க. இப்போ உடனே கிளம்புங்க. இரவு உங்களுக்குப் பதிலா வேறு யாரையாவது அனுப்புறேன். சந்தேகப்படும்படியா அங்கே என்ன நடந்தாலும் எனக்கு உடனே தெரியப்படுத்தணும். குறிப்பா யார் அங்கே வந்து பூஜை அது இதுன்னு ஏற்பாடு செய்யிறாங்கன்னு தெரியணும். நானும் அப்பப்போ வருவேன்."

"சரி சார்."

விறைப்பான சல்யூட்டுடன் அவர் விடைபெற்றுப்போன அடுத்த அரை மணி நேரத்தில் தொலைபேசி ஒலித்தது.

"அலோ... இன்ஸ்பெக்டர் சாரா? நான் குமாரசாமி பேசுறேன் சார்" என்றது மறுமுனை பதற்றமாக.

"ஆமா... சொல்லுங்க."

"சார்... நானும் பசுபதியும் அந்தக் கோவில்லுக்குப் போனோம். அங்கே ஒரு பிணம் கிடக்கு சார்..."

"என்ன...?" அதிர்ந்தான், அருண்.

"ஆமா சார்... யாருன்னு தெரியலை... பொம்பளை பிணம்தான். போனமுறை கிடந்த நாகம்மா மாதிரியே கர்ப்பிணி. நீங்க உடனே வந்து பாருங்க சார்..."

"நீங்க இப்போ எங்கே இருந்து பேசுறீங்க?"

"மெயின் ரோடு வந்து ஒரு பூத்ல இருந்து பேசுறேன். பசுபதி கோவில்ல இருக்கார்."

"வேறு ஆள் யாரும்..."

"யாரும் கிடையாது சார்."

"இப்போ உடனே வர்றேன். நீங்க எதையும் தொடாதீங்க. யாரும் வந்தா பக்கத்தில் விடாதீங்க. கால்தடம் ஏதாவது மண்பாதையில் தெரிஞ்சா சிதைக்காம இருங்க."

சட்டென்று ரிசீவரை வைத்துவிட்டு எழுந்தான், அருண்.

அடுத்த நிமிடங்களில் போலீஸ் நிலையம் பரபரப்பானது. வயர்லஸ்கள் கரகரத்தன. ஜீப் தயாரானது. பூட்ஸ் கால்கள் தடதடத்தன.

கிளம்பினார்கள்.

## 5


**நா**கம்மா மாதிரி பிணமாகக் கிடந்தாள், காஞ்சனா.

தலை வெட்டப்பட்டு தனியாக காளி சிலையின் பாதத்தை முத்தமிட்டது போல் வைக்கப்பட்டிருந்தது.

உடல் எதிரே இருந்த ஆளுயர சூலத்தின் அடியில் அலங்கோலமாகக் கிடந்தது.

ரத்த வெள்ளம் என்று சொல்ல முடியாவிட்டாலும், ரத்தம் உறைந்துபோய் இருந்தது.

இடுப்புப் பகுதிக்குக் கீழே தெரிந்த காயம், குழந்தைக்கு என்ன ஆகியிருக்கும் என்பதை ஓரளவு கோடிகாட்ட, சித்தம் கலங்கியது போல் உணர்ந்தான், அருண்.



சுற்றியிருந்த எல்லோருக்குமே அடிவயிற்றில் பலமான கலக்கம்.

திடீரென்று வந்த ஜீப் தந்த பதற்றத்தில் பக்கத்துப் பகுதி மக்களெல்லாம் ஓடிவந்தனர். அவர்களை தடுப்பது அங்கிருந்த சொற்ப போலீசாருக்குக் கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது.

## ஓரெழுத்து ஊர்

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் பக்கமுள்ள ஒரு ஊரின் பெயர் "டா"னா என்று உள்ளது. இதை ஓரெழுத்து ஊர் என்று சொல்கிறார்கள்.

—சரளா உத்ரா.

"போன தடவை அமாவாசையில் பலி. இப்ப பவுர்ணமியில் பலி...." கூட்டத்தில் எவனோ கத்தினான்.

யார் என்று திரும்பிப் பார்த்தபோது மொத்த ஜனமும் மூச்சை மறந்து மௌனம் சாதித்தது.

அருணுக்குக் கொஞ்சம் வியர்த்தது.

உண்மைதான்— நாகம்மா அமாவாசையில் பலி!

தொடர்ந்து பவுர்ணமியில் காஞ்சனா பலி!

இனி அடுத்து...

நினைக்கவே கலக்கமாக இருந்தது.

"ராகவன்! ரமணிக்கு தகவல் சொல்லியாச்சா?"

"சொல்லியாச்சு சார்... இப்போ வந்திடுவாருன்னு நினைக்கிறேன்.

'அவரை எப்படித் தேற்றப் போகிறேன்?'

குனிந்து தேடினான்.

'எதைத் தேடுகிறேன்? கொன்றவன் விட்டுச்சென்ற தடயங்களையா? இல்லை அவன் பாதத் தடங்களையா?' குழம்பினான்.

வித்தியாசமாய் ஏதாவது வாகனத் தடம்? ஊகூம்...

தடய இயல் நிபுணர்கள் அவர்களின் கடமையில் சூழ்ந்திருந்தனர். கிடைத்த தடயங்களைக் கவனமாக

சேகரித்துக்கொண்டிருந்தார்கள்.

'இந்தத் தொடர் கொலைகளைத் தடுக்க முடியுமா? போன பலிக்குப் பிறகு கோவில் காவலுக்கு அனுப்பியிருந்த காவலர்கள் பத்து நாள் வரை எந்தவித ஆள் அரவமோ, அசம்பாவிதமோ இல்லை என்று சொன்னதும் அவர்களைத் திரும்ப அழைத்தது தவறோ? அவர்கள் தொடர்ந்து காவலில் இருந்திருந்தால் இந்த பலி நடைபெறாமல் தடுக்கப் பட்டிருக்குமோ?'

அருணுக்கு உறுத்தலாக இருந்தது.

"என்ன சார்... கொஞ்சம் டல்லான மாதிரி தெரியுறீங்க?" என்று கேட்ட ராகவனுக்கு பதில் சொல்ல முடியாமல் பொய்யாக புன்னகைக்க முயன்றான். அதுகூட முடியவில்லை.

இது எவ்வளவு பெரிய அவமானம்!

ஒரே இடத்தில் ஒரே மாதிரி இரண்டு பேரை பலி கொடுத்திருக்கிறான்.

பகிரங்க சவால்!

'உங்க போலீசால என்னடா பண்ண முடியும்?' என்று கேட்காமல் கேட்டிருக்கிறான் அவன்!

ஆத்திரத்தில் புற்களை நறநறத்தான், அருண்.

அடுத்த நாள் உயர் அதிகாரிகளிடம் இருந்து அருணுக்கு அழைப்பு வந்தது.

## 6

"முதல் பலி நடந்து எத்தனை நாளாகிறது?"

"இன்னியோட பதினேழு நாள் சார்..."

"இதுவரை என்ன செஞ்சி இருக்கீங்க...?"

மென்று விழுங்கி மவுனம் சாதித்தான், அருண்.

"எத்தனை பேரை கைது பண்ணி இருக்கீங்க...?"

"ஒருவரையும் கைது பண்ணல்லை சார்..."

"ஏன்...?"

அருணிடம் அடர்ந்த மவுனம்.

"யார் மீதாவது சந்தேகம் இருக்கா...?"

"இல்லை..."

"இது நரபலியாக இருக்கும்னே நீங்க நினைக்க வில்லையா?"

"உண்மையா சொன்னா காஞ்சனா பலியானதைப் பார்க்கும்வரை இது எதுக்கோ நடந்த வேலைன்னுதான் சார் நினைச்சோம்..."

"அதனால்தான் கோவிலில் ஆள் நிறுத்தலையா?"

"முதல்ல நிறுத்தியிருந்தோம் சார்..."

"எவ்வளவு நாள்?"

"பத்து நாள் சார்..."

"உம்..."

"அப்போ எந்தவிதத் தகவலும் இல்லை..."

"பத்து நாள் நிறுத்தியாச்சு... இன்னும் ஐந்து நாள் நிறுத்த முடியலையா?"

'என்னையா இது அசட்டுக் கேள்வி?' என்று மனதுக்குள் நினைத்தபடி..

"இல்ல சார்... இப்படி நடக்கும்னு எதிர்பார்க்கலை... அதுவும் அமாவாசைக்கும், அடுத்து பவுர்ணமிக்கும் அதே இடத்தில் பலி கொடுக்கப்படலாம்னு நினைச்சுக்கூடப் பார்க்கலை சார்..."

"சும்மா, எதையாவது சொல்லாதீங்க... அங்க நம்ம ஆள்

**பருவ ஊர்கள்!**

மானிடர்களின், பல பருவங்களைக் குறிக்கும் சில ஊர்கள் நெல்லை மாவட்டத்தில் உள்ளன. அவை: பாப்பாங்குளம், இளம்புவனம், குமரன்புதூர், கன்னிப்பாளையம், காளையன்பட்டி, கிழவன்புதூர், கிழவிப்பட்டி.

நின்னுருந்தா இந்தக் கொலையைத் தடுத்திருக்கலாம் இல்லையா?"

அதற்கும் மவுனம்.

தினப் பத்திரிகை ஒன்றைக் காட்டினார்.

"பாருங்க... இதில் என்ன போட்டிருக்காங்கன்னு..."

அருண், ஏற்கனவே படித்த செய்தி தான்.

'நரபலிக்குப் போலீசும் உடந்தையா? கோவிலில் இருந்து போலீஸ் காவல் ஏன் விலக்கிக்கொள்ளப்பட்டது? எதிர்க் கட்சிகள் கேள்வி.'

அரசியல்வாதிகளின் அதீத கற்பனைகள் அசாத்திய மானவை.

தொடர்ந்து மவுனம் சாதித்தான், அருண்.

"உங்ககிட்டே நான் ரொம்ப எதிர்பார்த்தேன் அருண்..."

அருணுக்கு தர்மசங்கடம். அவர் கோபத்தின் உச்சத்தில் இருக்கிறார் என்று தெரிந்தது.

"இன்னும் பத்தே நாளில் நிச்சயமா கொலையாளியை உங்க முன்னால் கொண்டு நிறுத்துறேன் சார்..."

எதிரே நம்பிக்கை இல்லாத புன்னகை.

"சாயந்தரம் இது சம்பந்தமா இந்த தொகுதி எம்.எல்.ஏ. என்னைப் பார்க்க வர்றேன்னு சொல்லியிருக்கார். எவ்வளவு சிக்கலா ஆகிப்போச்சு பாருங்க..."

அருண், தலைகவிழ்ந்தான்.

"கர்ப்பிணி பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லைன்னா அப்புறம் எதுக்கு போலீஸ்னு கேட்பாங்க... என்ன

பதில் சொல்ல?"

"இன்னும் பத்து நாள்ல கண்டுபிடிச்சிடுறேன் சார்..."

"ரமணிகிட்டே விசாரணை பண்ணினீங்களா?"

"இன்னும் இல்லை சார்... நேற்று அவங்க வீட்டுல் உறவினர்கள் கூட்டம் நிறைய... அவரே இன்னிக்கு சாயங்காலம் வரச்சொல்லிட்டார்..."

"கொஞ்சம் தீவிரமா பாருங்க... ஏற்கனவே பல வழக்குகளில் போலீசுக்கு எதிரா வாதாடி அந்த ரமணி நம்மைத் தலைகுனிய வச்சிருக்கார். அதுக்குப் பழி வாங்குறதுக்காகவே அசட்டையா இருக்கிறோம்னு சொல்லிடப் போறார்..."

'அவர் அப்படிப்பட்ட ஆள் இல்லை' என்று சொல்லத் தோன்றியது. சொல்லவில்லை.

அதிகாரியிடம் சிறிது நேரம் சிந்தனை.

"உங்களுக்கு தகவல் கொடுத்தது யார்?"

"எதுபற்றி சார்?"

"இந்த மாதிரி மீண்டும் பிணம் கிடக்குதுன்னு."

"நான் அனுப்பின போலீஸ்காரர் சார்."

"ஏன் அனுப்பினீங்க?"

"ரமணியின் மனைவியைக் காணோம்னு சொன்னதும் சந்தேகம் வந்தது. அவங்களும் கர்ப்பிணி. அதனால்தான் கோவிலுக்கு ஆளனுப்பினேன்."

"தடயம் ஏதும் கிடைத்ததா?"

"குறிப்பிட்டுச் சொல்லும்படியா எதுவும் கிடைக்கலை சார். சூலத்திலும் காளி பாதத்திலயும் ரத்தப் பொட்டு வச்சதுல கைரேகை கிடைச்சிருக்கு. முக்கியமா கிடைத்தது இது ஒண்ணுதான். இந்த விஷயத்தை ரகசியமா வச்சிருக்கோம்."

"இந்த ரேகை முந்தின முறை தெளிவா கிடைக்கலை சார்."

"ஏன்?"

"நாம் போனதே ரெண்டு நாள் கழிச்சுத்தான்."

"அப்போ தகவல் கொடுத்தது யாரு?"

"உள்ளூர் ஜனங்கள். அந்தப் பக்கமா கழுகு நிறையப் பறக்கிறதைப் பார்த்ததும் சந்தேகம் வரவே போயிருக்காங்க. அவங்கதான் தகவல் கொடுத்தாங்க."

"வேறு தகவல் எதுவும்?"

"இரண்டும் ஒரே மாதிரியான முயற்சிதான். கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லாத பெண்கள் இரண்டு பேர் ஒரே இடத்தில் ஒரே விதமாக சாகடிக்கப்படுறாங்கன்னா பகை சம்பந்தமான விவகாரமா நினைச்சுப் பார்க்க முடியலை சார்..."

"நரபலின்னு விவகாரம் போச்சுன்னா யாரை போய் சந்தேகப்படுவீங்க? எத்தனையோ மந்திரவாதிகள் இருக்காங்க."

"அதனால் என்ன சார்... பிடிச்சிடலாம்."

"சரி... இது உங்களுக்கு கடைசி, இன்னொரு கொலை விழுந்தால்..."

"விழாது சார்."

விறைப்பாக 'சல்யூட்' அடித்துவிட்டுத் திரும்பியவனை "மிஸ்டர் அருண்" என்ற அழைப்பு தடுத்து நிறுத்தியது.

திரும்பினான்.

"இனியாவது உங்க முயற்சி வெற்றிபெறட்டும். வாழ்த்துகள்."

"நன்றி சார்."

வெளியே வந்தான்.

பால்கனியில் நின்று கொஞ்சம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

'வாழ்த்தப்பட்டேனா? ஊக்குவிக்கப்பட்டேனா?

கண்டிக்கப்பட்டேனா? மிரட்டப்பட்டேனா?'

ஏதோ ஒரு வேகத்தில் பத்து நாளில் பிடித்துவிடுவதாகச் சொல்லியாகிவிட்டது. அடுத்தக் கட்ட விசாரணையை எங்கிருந்து தொடங்குவது?

ஏதோ ஒரு முனையில் தொடங்க வேண்டும். எங்கிருக்கிறது அந்த முனை?

## 7

மதிய சாப்பாட்டுக்காக வீட்டுக்குள் நுழைந்தான், அருண். சாந்தாவும் தேவியும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு முடிவோடு வந்த அருண், "அம்மா! உனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் ஏவல் செய்வினை எல்லாம் செய்வார்னு சொல்லுவியே..." என்றான்.

அவனைக் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு உள்ளறைக்குள் போனாள், சாந்தா.

"என்னம்மா?"

"உனக்கு அறிவிருக்காடா? நானும் திரும்பத் திரும்பச் சொல்றேன். புரிஞ்சுக்கமாட்டேங்கிறே... பிள்ளைத்தாய்ச்சி முன் கொலை, நரபலின்னு பினாத்திட்டிருந்தே... இப்போ ஏவல் அது இதுன்னு வேறு சொல்லத் தொடங்கிட்டே..."

அருண் சிரித்தான்.

"சிரிக்காதேடா... என் பதற்றம் எனக்கு. பாவம் அவள்... தாயில்லாப் பிள்ளை... அவள் நல்லபடியா பெற்றுக் கரையேறணுமேன்னு நான் வேண்டாத தெய்வமில்லை... உனக்கு எல்லாமே விளையாட்டா இருக்கு..." அருண் கனிந்து போய் அம்மாவின் அருகில் சென்று கைகளைப்

பிடித்துக்கொண்டு சொன்னான்: "அம்மா! தேவி ரொம்பக் கொடுத்துவச்சவ... இப்படி நீ காட்டுற உண்மையான அன்பை மீறி அவளுக்கோ அவள் வயிற்றில் இருக்கும் உன் பேரனுக்கோ எந்தத் தீங்கும் ஏற்படாது..."

"சரி... சரி... ஆனா ஒண்ணு மட்டும் உறுதியா சொல்றேன். உன் போலீஸ் பிரச்சினைகள் எல்லாம் உன்னோடு இருக்கட்டும். இனிமேல் அவளிடம் இதுபற்றிப் பேசக் கூடாது. சரியா?"

"சரிம்மா. ஆனா உன்கிட்ட மட்டும் ஒண்ணே ஒண்ணு கேட்கிறேன்."

"கேளு."

"ஏற்கனவே கேட்டேனே! பில்லி சூனியம் வைப்பாரே, அவர் எங்கே இருக்கார்?"

"தத்தனேரியில்."

"நல்ல இடம். தெரு?"

அடையாளம் சொன்னாள்.

"எதுக்குடா?"

"இந்த வழக்கு விஷயமா கொஞ்சம் சந்தேகம் கேட்கணும்."

சாப்பிட உட்கார்ந்தார்கள்.

"காஞ்சனா பாவம்... ரமணி எப்படி இருக்கார்? நீங்க போய்ப் பார்த்தீங்களா?" என்று விசாரித்தாள், தேவி.

அருண் ஆள்காட்டி விரலைத் தன் வாய்க்குக் குறுக்காக வைத்து, "இது விஷயமா உன்னுடன் எதுவும் பேசக் கூடாதுன்னு அம்மா கட்டளை" என்றான்.

தேவி சிரித்தாள்.

அருண் சொன்னான்: "நீ சொன்னதும்தான் ஞாபகம் வருகிறது. நான் மாலையில் ரமணியைப் போய்ப் பார்க்கணும். வரச்சொல்லியிருக்கார்."

"காலையில் உங்க அதிகாரிகளைப் பார்க்கப் போயிருந்தீங்களே, என்ன ஆச்சு?"

"செம டோஸ்."

"அதை நானும் உனக்கு இப்போ கொடுக்கப்போறேன்" என்று சாந்தா ஒரு அதட்டல் போட வாயடைத்தான்.

'ராத்திரி பேசிக்கொள்வோம்' ஜாடையாக தேவியிடம் சொன்னான்.

"வாங்க அருண்" என்று போலிப் புன்னகையுடன் வரவேற்றார், ரமணி.

வீட்டில் இன்னும் சில உறவினர்களின் நடமாட்டம் இருந்தது. பெரிய வீடு. வெளி வாசலில் இருந்து வீட்டு வாசலுக்கு வரும் இடைவெளி முழுக்க தோட்டம்.

மாடி முழுதும் ரமணியின் அலுவலகம். எவ்வளவு புத்தகங்கள்! எவ்வளவு ஆவணங்கள்!

இப்போது அருண் உட்கார்ந்திருந்தது பக்கவாட்டு அறையில். எதிரே ரமணி.

"காரியங்கள் முடிந்ததா?"

"உம்..."

"தேவியும் வர்றேன்னு சொன்னா. அம்மாதான்..."

"பரவாயில்லை... எல்லாரும் எப்படி இருக்காங்க? பார்த்து நாளாச்சு."

"இப்போ யாரெல்லாம் இங்கே இருக்காங்க?"

"ரெண்டு மூணு உறவினர்கள் மட்டும்தான். அவங்களும் இரவு கிளம்புறாங்க."

"சரி... நான் கொஞ்சம் தொழில் ரீதியா இறங்க வேண்டியிருக்கு."

"சொல்லுங்க."

## சங்கு முகம்

ஆத்தூர் அருகில் கடலில் தாமிரபருணி கலக்கும் இடத்தை "சங்கு முகம்" என்பார்கள்.

தை அமாவாசை, ஆடி அமாவாசைகளில் கடலில் குளிக்க நெல்லை மாவட்டம் முழுவதும் இருந்து மக்கள் இங்கே வருவது உண்டு.

"சம்பவம் நடந்த அன்னிக்கு நீங்க காலையில கிளம்பிப் போனப்போ வீட்டில் யாரெல்லாம் இருந்தாங்க?"

"சமையல்காரன் ராமையா, வேலைக்காரி அஞ்சுகம், டிரைவர்."

"ராமையாவைக் கூப்பிடுங்களேன்."

"சொல்லிட்டு வர்றேன். ஜூஸ் கொண்டுவருவான்."

ராமையா வந்தான். அருணுக்கு அவனை முன்பே தெரியும். பணிவாய் பயந்து பயந்துதான் பேசுவான்.

"ராமையா..."

"சார்..."

"கொஞ்சம் நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. அம்மா அன்னிக்கு எத்தனை மணிக்கு வெளியே கிளம்பினாங்க?"

"பதினொரு மணிவாக்கில்."

"என்ன சொல்லிட்டுப் போனாங்க?"

"மத்தியானம் சாப்பாட்டுக்கு முதலாளியய்யா வருவாங்க. நான் வெளியே போயிருக்கேன்னு சொல்லுன்னு சொன்னாங்க."

"நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. வேற ஏதாவது சொன்னாங்களா?"

"இல்லை."

அவனைப் போகச் சொன்ன அருண், "ரமணி! இப்படி அவங்க வெளியே தனியா போவாங்களா?" என்று கேட்டான்.

"அப்பப்போ திடீர்னு கிளம்பிப் போவா. அதுக்காகவே ஒரு டிரைவரையும் காரையும் அவள் பொறுப்பில் விட்டிருந்தேன்."


"ஒரு டிரைவர்தானா?"

"உம்... என் காரை நானே ஓட்டுவேன்."

"அன்னிக்கு மத்தியானம் நீங்க கோர்ட்டுல இருந்து

## திமிங்கல எலும்புகூடு!

**தரங்கம்பாடி 26-2-1955இல் கடற்கரை ஓரத்தில் ஒதுங்கிய 92 அடி நீளமுள்ள இராட்சதத் திமிங்கலத்தின் எலும்புக்கூடு**



*92 அடி நீள திமிங்கல எலும்புக்கூடு!*

**இப்போது தஞ்சைக் கலைக்கூடத்தில் இருக்கிறது. இது உயிர் வாழும் பிராணிகளில் எல்லாம் மிகப் பெரியது! திமிங்கலத்தின் வயது சராசரி 400 ஆண்டு!!**

—மேவானி கோபாலன்.

எப்பயாவது வெளியே வந்தீங்களா?"

"காலையில் போனவன் மூணரை மணிக்கு வீடு திரும்புற வரை அங்கே இங்கே நகரலை."

"நடுவில் இவங்க போன் எதுவும் பண்ணினாங்களா?"

"இல்லையே. அதுதான் என் கவலைக்கே காரணம்."

"சரி... டிரைவரைக் கூப்பிடுங்க."

அவனிடமிருந்து முக்கிய தகவல் கிடைக்கும் என்று அருண் நினைத்தான்.

## 8

ரமணியின் டிரைவரை விசாரித்து பார்த்தான்.

காஞ்சனா பகல் பதினொரு மணிவாக்கில் காரில் புறப்பட்டதாகவும், கோரிப்பாளையத்தில் இறங்கிக்கொண்டு அவனைத் திருப்பி அனுப்பிவிட்டதாகவும் சொன்னான்.

"நீ எதுவும் கேட்காமல் திரும்பிவிட்டாயா?"

"இல்லைங்க சார். திரும்பி எப்படி வருவீங்க, நீங்க இடமும் நேரமும் சொன்னா நான் திரும்பி வர்றேம்மான்னு சொன்னேன். அவங்க 'அதுக்கு அவசியமில்லை. நீ வீட்டுக்குப் போ. அப்படி ஒருவேளை கார் தேவைப்பட்டால் போன் பண்ணி சொல்றேன்'னு சொன்னாங்க. நான் அதுக்குமேல் எதுவும் கேட்கலை."

"நீ புறப்படுறதுக்கு முன்னால் அவங்க எந்தப் பக்கமாப் போனாங்கன்னாவது பார்த்தியா?"

"அவங்க பஸ் நிலையம் பக்கமாத்தான் போனாங்க. நான் கொஞ்சம் தள்ளி காரை நிறுத்திட்டு டீ குடிச்சிட்டு

இருந்தப்போ அவங்க கோர்ட்டு பக்கமாப் போற பஸ்சில் ஏறினதைப் பார்த்தேன்."

அருண், ஏறிட்டுப் பார்த்தான்.

"எனக்கும் அதுதான் ஆச்சரியமா இருக்கு அருண். கோர்ட்டுக்கு வர்ற பஸ்சில் ஏறினவள், என்னைப் பார்க்க வரவில்லையே" என்றார், ரமணி மிக இயல்பாக.

## கோட்டிக்காரன்

திருநெல்வேலியில் பைத்தியக்காரனைக் "கோட்டிக்காரன்" என்பர். கோட்டி என்பது நல்ல தமிழ்ச்சொல். "கோட்டம்" என்றால், கோணல். மனதிலே உள்ள கோணல் மனக்கோட்டம் எனப்படும். மனக்கோட்டம் உள்ளவன், "கோட்டிக்காரன்."

—*கண்ணதாச தாசன்.*

கோர்ட்டு இருக்கிற திசையில் தான் அந்த வெட்டுண்ட காளி கோவிலும் இருக்கு. ஆனால், தூரம் அதிகம். அந்த பஸ்சில் அங்கே போகவும் முடியாது. மேலும் காஞ்சனா மாதிரியான படித்த பெண்ணுக்கு அங்கே போகவேண்டிய அவசியம் இல்லை.

டிரைவர் டீ குடித்த கடை எது என்பதற்கான அடையாளத்தைச் சரிவரக் கேட்டுக்கொண்டு அவனை அனுப்பிய அருண், ரமணியிடம், "உங்க மனைவிக்கு சாமி நம்பிக்கை எல்லாம் எப்படி?" என்று கேட்டான்.

"தனி பூஜை அறை வைத்திருந்தாள். ரொம்பவே பக்தி உணர்வு உள்ளவள்தான்..." ரமணியின் குரல் உடையத் தயாரானது.

"வேறு வகையான நம்பிக்கைகள்? பேய், சூனியம் என்றெல்லாம்..."

"உறுதியா சொல்லத் தெரியலை அருண். சாதாரண சராசரிப் பெண்ணுக்குரிய நம்பிக்கைகள், பயங்கள் எல்லாமே அவளுக்கு உண்டு."

"மந்திரவாதிகள் மீது நம்பிக்கை அப்படி இப்படின்னு..."

“எனக்குத் தெரிய அப்படி எதுவும் இல்லை. அருண்! உள்ளபடியே சொல்லணும்னா நான் அவளுக்கு ஒரு நல்ல கணவனே கிடையாது.”

அருண் நெற்றியை நிமிர்த்திப் பார்த்தான்.

“இருபத்தெட்டு வயதில் எனக்குத் திருமணம். அவளுக்கு இருபத்தொரு வயதுதான். அவளை சினிமா, கோவில் குளம், பொழுதுபோக்கு என்றெல்லாம் கூட்டிப்போனதே இல்லை நான், கோர்ட்டு, வழக்கு, வாதம் என்றே இருந்துட்டேன்.”

அவர் கொஞ்சம் நிறுத்தித் தொடர்ந்தார்.

“அவளும் இதையெல்லாம் முதலில் கண்டுகொள்ள வில்லை. பிறகு கொஞ்சம் வெளிப்படையா பேசத் தொடங்கினாள். கருத்தரித்த பிறகு கொஞ்சம் ஆசைப் பட்டவைகளைக் கேட்டாள். சின்ன சண்டைகள்கூடப் போட்டிருக்கிறாள். அப்போகூட நான் இறங்கி வரலை. அதை இப்போ நினைச்சா வேதனையா இருக்கு” ரமணி, குரல் உடைந்து அழத் தொடங்கினார்.

“மகராசி! உயிரோடு இருந்தா அவளுடைய ஆசை எதையுமே நிறைவேற்ற மாட்டேன்னு போயிட்டாளோ என்னவோ... ஒரே குற்ற உணர்வாகவே இருக்கு. என்னுடைய தொழில் வெறிதான் அவளைக் கொன்னுருச்சோன்னு உறுத்தலா இருக்கு...” தேம்பித் தேம்பி அழுதார்.

அவர் கொஞ்ச நேரம் அழட்டும் என்றிருந்தான், அருண். பிறகு மெல்லத் தட்டிக் கொடுத்தான்.

“மனதை தேற்றிக்கொள்ளுங்க ரமணி. என்ன இது... சிறு குழந்தையாட்டம்...” நட்பின் காரணமாக அவனுக்கும் குரல் கொஞ்சம் கம்மியது.

“அருண்... எனக்கு இனி எதுவும் வேண்டாம். என் மனைவியையும் மலரும்முன்பே சாகடிக்கப்பட்ட மகனையும் கொன்றவனைக் கூண்டில் ஏற்றி மரணதண்டனை வாங்கித்

தரவேண்டும். அதற்குத் தான் உயிரை வைத்திருக்கிறேன். அதற்குப் பிறகு நான் கோர்ட்டு வாசலை மிதிக்கப் போறதில்லை" என்றார், திடீரென்று ஆவேசம் வந்தவராக.

அவரைச் சமாதானப் படுத்திய அருண் மெதுவாக, "காஞ்சனாவுக்குத் தனி அறை ஏதும் உண்டா?" என்று கேட்டான்.

## பஞ்சந்தாங்கி

குற்றால மலையில் உள்ள ஒரு சிகரத்தின் பெயர்– பஞ்சந்தாங்கி!

இடி தாங்கி, சுமை தாங்கி போன்று, பஞ்சத்தைத் தாங்கிக் கொள்ளும் சிகரம், இது.

இந்தச் சிகரத்தில் எப்பொழுதும் மேகம் படிந்து இருக்கும். மேகம் பொழிந்தால், பஞ்சம் இல்லை அல்லவா? ஆகவே, இந்தச் சிகரத்துக்கு "பஞ்சந்தாங்கி" என்று பெயர் வந்தது.

"அவளுக்கென்று தனியாக அறை கிடையாது. எங்க படுக்கையறையில்தான் அவளுடைய பொருட்களை எல்லாம் வைத்திருப்பாள்."

"அந்த அறையைப் பார்க்கலாமா?"

"தாராளமாக."

முகத்தை நன்றாகத் துடைத்துக்கொண்டு எழுந்தார், ரமணி.

இருவரும் அந்த அறையினுள் நுழைந்தனர்.

நடுநாயகமாக, அழகிய வேலைப்பாடுடன்கூடிய பெரிய கட்டில்.

அதைப் பார்த்தவுடன் ரமணியின் முகம் போன போக்கைப் பார்க்க முடியவில்லை.

அவர் பழையது எதையோ நினைத்து உள்ளுக்குள் உடைந்துபோவதை அது காட்டியது.

அவர் தோள்களில் தட்டிக் கொடுத்த அருண், அந்த அறையைச் சுற்றிலும் நோட்டமிட்டான்.

## எருமை மரம்!

நெல்லை மாவட்டத்தில் உள்ள பொதிகைமலையில் காணப்படும் ஒருவகை மரத்திற்கு "எருமை மரம்" என்று பெயர். இம்மரத்தின் இலைகள் எருமையின் நாக்கு உருவில் உள்ளன. இம்மரத்தைக் கல்லால் காயப்படுத்தினால் பால் வடிகிறது. இந்தப் பாலைச் சூடாக்கி எருமைப் பால் போல் பயன்படுத்தலாம்.

"போன மூணு நாளில் இங்கே எதையாவது தேடினீங்களா ரமணி?"

"இல்லை அருண். இந்த அறைக்குள் வர்றதுக்கே எனக்கு மனதில் திடமில்லை. இன்னிக்குத் தான் வர்றேன்."

"இந்த அலமாரி சாவி எங்கே?"

கட்டிலின் தலைப் பகுதியில் கதவு போலிருந்த ஓர் அமைப்பைத் திறந்து சாவிக் கொத்தை எடுத்து நீட்டினார், ரமணி.

வாங்கி அலமாரிகளைத் திறந்தான். சேலைகள், அலங்காரப் பொருட்கள், உள்ளாடைகள், டைரிகள், நோட்டுப் புத்தகங் கள்... காஞ்சனாவின் மரணத்துக்குக் காரணம் என்ன என்று ஒரு முடிவுக்கு வர இயலாதபடி மனதில் குழப்ப மேகங்கள்.

**கா**ஞ்சனாவின் டைரியில் அவளுடைய புருஷ பக்தி வெளிப்பட்டது.

ரமணியைக் கணவனாக அடைந்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருந்தாள். பிள்ளைப் பேறு குறித்து முதலில் கவலைப்பட்டிருக்கிறாள். தாய்மை அடைந்ததிலிருந்து மிகுந்த உற்சாகத்தில் எழுதி இருந்தாள்.

இடையிடையே கவிதைகள் வேறு.

ஆனால்... எல்லாவற்றிலும் ஆழமாக ஒரு சோகமும் கூடவே இருந்தது.

ரமணி தன்னிடமிருந்து கொஞ்சம் தொலைவில் இருப்பது

போன்ற உணர்வு அவளின் வெளிப்பாடுகளில் தெரிந்தது.

வெளியே சொல்ல முடியாத, சொல்ல விரும்பாத ஓர் உள்சோகம் அவளை வாட்டி இருக்கிறது.

படிக்கப் படிக்க அருணின் முகத்தில் வேதனை வெளிப் பட்டது. மனம் தீவிர சிந்தனை யில் இறங்கியது.

**ஏலக்காய்த் தோல் ஏற்றுமதி**

விருதுநகரிலிருந்து பெருமளவில் ஏலக்காய்த் தோல் ஏற்றுமதி ஆகிறது! தோலிலிருந்து வாசனை எண்ணெய் தயாரிக்கிறார்கள்.

"ரமணி! அவங்க கருத்தரித்த பிறகு கொஞ்சம் தைரியமாகத் தானே இருந்ததாச் சொன்னீங்க?"

"உம்... கொஞ்சம் ஒருமாதிரிதான் பேசத் தொடங்கினா..."

"ரமணி! அப்ப இப்படி இருக்குமா? அவங்க உங்களை வசியப்படுத்தணும்னு யாராவது சொன்னதன் பேரில் மாந்திரீகனைத் தேடிப் போக, அதன் தொடர்ச்சியா இந்த அசம்பாவிதம் நடந்திருக்கலாமா?"

ரமணி, சங்கடமான உணர்வின் வெளிப்பாட்டுடன் மவுனம் சாதித்தார்.

அருண், கோரிப்பாளையம் கிளம்பினான்.

'கோர்ட்டு போகும் வழியில் ஏவல் வைக்கும் ஆள் யாரோ இருக்க வேண்டும்?'

பொறுமையாக இரண்டு மணி நேரம் அந்தப் பகுதியையே சல்லடை போட்டாற்போல் சலித்தான். விசாரித்தான்.

ஊகூம்... அப்படி யாரும் இல்லை.

அருணுக்குள் கொஞ்சம் துவளல் ஏற்பட்டது.

அவனுடைய ஊகங்கள் எதுவுமே சரியாகாமல் போனதில் எழுந்த சோர்வு. வீடு திரும்பினான்.

## பிரம்பு நாற்காலி

உலகப் புகழ்பெற்ற பத்தமடைபாய், நெல்லைக்குச் சொந்தம்!

செங்கோட்டை விஸ்வநாதபுரம், மூங்கில் கூடைகள் பிரம்பு நாற்காலிகளுக்குப் புகழ்பெற்றது.

குற்றாலத்தை அடுத்த தேன்பொத்தையும், காருகுறிச்சியும் மண் பாண்டத் தொழிலில் சிறந்து விளங்குகின்றன.

அம்பாசமுத்திரத்தில் உள்ள வாகைக்குளத்தில் பித்தளை விளக்குகள் செய்யப்படுகின்றன.

தேவி அவனைத் தேற்றினாள்.

"இதோ பாருங்க... உங்க எதிர்பார்ப்பின்படியே அங்கே ஒரு மாந்திரீகன் இருந்தாலும் நீங்க உடனே என்ன செய்துவிட முடியும்? அவன்தான் நாகம்மாவையும் காஞ்சனாவையும் பலி கொடுத்தான்னு எப்படி நிரூபிப்பீங்க?"

"நீங்க ஒண்ணு பண்ணுங்க... இந்த நரபலி சம்பந்தமான தகவல்களைத் திரட்டுங்க... ஓர் ஆளைப் பற்றி அத்தைகிட்டே விசாரிச்சீங்களே அவரைப் போய் பார்த்தீங்கன்னா விவரம் கிடைக்கும்னு தோணுது."

"தேவி..." என்று நன்றி உணர்வுடன் அவளை அணைத்துக்கொண்டான், அருண்.

மறுநாள் காலையில் முதல் வேலையாக அந்த மாந்திரீகரைத் தேடிச் சென்றான்.

## 9

அந்த வீட்டின் வாசலில் 'இவ்விடம் பில்லி சூனியம் மற்றும் ஏவல் செய்வினைகளிலிருந்து நிவர்த்தி செய்யப்படும்' என்பது போல் ஏதாவது போர்டு இருக்கும், அதில் இரண்டு மண்டை ஓடுகளின் படம் வரைந்திருக்கும் என்று எதிர்பார்த்த அருண் ஏமாந்துபோனான்.

பெரிய வீடு. ஆனால், எளிமையாக, வெள்ளை அடிக்கப் பட்டு சுத்தமாக இருந்தது. நீள பெஞ்சு போடப்பட்டு அதில் மூன்று நான்கு பேர் உட்கார்ந்திருந்தனர்.

இருவர் கைகளில் எலுமிச்சம்பழம். ஒருவர் சிறிய பொட்டலம் வைத்திருந்தார்.

அது யாருடைய தலைமுடியோ... காலடி மண்ணோ!

அருணுக்கு சிரிப்பு வந்தது. இது எந்த வகையிலான நம்பிக்கை என்று புரியவில்லை. வேண்டாதவன் மீது சூனியம் ஏவிவிடுவதென்பதும், அது பலிக்கும் என்பதும் எந்த அளவுக்கு உண்மை என்று புரியவில்லை.

ஆனால், அருண் வந்த நோக்கம் வேறு.

அவன் போலீஸ் உடையில் வரவில்லை. சாதாரண உடையில் அவனுடைய தோற்றப் பொலிவையும் இளமையை யும் கண்டவர்கள் வியப்பாய்ப் பார்த்தனர்.

அருண் கஷ்டப்பட்டு தன் பார்வையை அங்கிருந்தோரிடம் இருந்து அகற்றினான்.

அங்கே—

பெரிதாக அறை. நடுவில் ஊஞ்சல். அதில்தான் அவர் உட்கார்ந்திருந்தார்.

வயது எழுபது இருக்கும். உடல் முழுவதும் திருநீற்றுப்பூச்சு. கொஞ்சம் பயமாகக்கூட இருந்தது.

பக்கத்து அறையிலிருந்து நறுமணப் புகையும், வெளிச்சமும் வெளிப்பட்டன. அது பூஜை அறையாக இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

அருண், தன்னை அறிமுகப்படுத்தினான்.

"அடடா! சாந்தாம்மா மகனா நீ? அவங்க நல்லா இருக்காங்களா?" என்று விசாரித்தார். உட்கார வைத்தார்.

குளிர்பானம் கொண்டுவரச் சொல்லிக் கொடுத்தார்.

குடித்தபடியே சுற்றிலும் பார்த்தான், அருண். அங்கங்கே



செப்பு வெள்ளித் தகடுகள்.

"சொல்லுப்பர்... என்ன வேணும்?"

"நரபலி கொடுக்கிறது பற்றிக் கொஞ்சம் தகவல் வேணும்."

"நரபலியா...?" கண்களை மூடி மெல்லத் திறந்தார்.

கண்கள் இப்போது சிவப்பேறி இருந்தன.

"தம்பி! மனிதர்களில் நல்லவங்க கெட்டவங்க்னு இருக்கிற மாதிரி தேவதை களிலும் நல்ல தேவதை துஷ்ட தேவதைன்னு இருக்கு."

## சாத்தூர் சம்பா

**சா**த்தூர் பகுதியில் சாகுபடியாகும் ஒரு வகை மிளகாய்க்கு "சாத்தூர் சம்பா" என்று பெயர். கண்ணைக் கவரும் சிவப்பு வண்ணத்தில் உள்ள இந்த மிளகாய், நல்ல காரம் கொண்டது. சாத்தூர் சம்பா மிளகாய் வற்றல், மார்க்கெட்டில் நல்ல விலைக்குப் போகும். நாட்டிற்கு அந்நிய செலாவணி ஈட்டித்தரும், முதல்தர மிளகாய், இது.

அவர் சொன்னவற்றை மனதுக்குள் அசை போட்டுப் பார்த்தான், அருண்.

"நரபலிங்கிறது..."

"தேவதைகள்... ஏன், துஷ்ட தேவதைகளில் சிலகூட நரபலியை ஏற்பதில்லை. ஆனாலும், ஏதாவது காட்டுத் தேவதைகளின் அதீத வேகத்தைத் தணிவிக்க நரபலி தரலாம்."

அருண் சிறிது நேர யோசனைக்குப் பிறகு கேட்டான்: "நரபலியா யாரை வேணும்னாலும் தரலாமா?"

"அது வேண்டுதலைப் பொறுத்தது. தேவதையின் வீரியத்தைப் பொறுத்தது. குழந்தையைத் தரலாம். அதிலும் தலைக்குழந்தை ஆணாக இருந்தால் தரலாம். கன்னி கழியாத புஷ்பவதிகளைத் தரலாம். எல்லாவற்றிலும் சக்திவாய்ந்த பலி, முதல் குழந்தையை வயிற்றில் கொண்ட சூலி. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான பலன் கிடைக்கும்னு நம்பிக்கை."

## மூன்று மாவட்டம்

பெருந்தலைவர் காமராஜர் பிறந்தபோது அவர் பிறந்த விருதுநகர், திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்தது. பின் இராமநாதபுரம் மாவட்டத்தில் இணைந்தது. இன்று விருதுநகர் மாவட்டத்தின் தலைநகராக விளங்குகிறது.

அருணுக்கு கேட்கவே வித்தியாசமாக இருந்தது.

எல்லாம் புதிய செய்திகள். அவர் ஒவ்வொரு பலி பற்றியும் விவரித்துச் சொல்லச் சொல்ல உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டான்.

அவர் சொன்ன எல்லாவற்றையும் நிதானமாக அசை போட்டுப் பார்த்தான். பிறகு மெல்ல நாகம்மாள், காஞ்சனாவின் பலிகளைப் பற்றி விசாரித்தான்.

அனைத்தையும் கேட்டவர் சொன்னார்: "தம்பி! உன் அம்மா மீதும் உங்கள் குடும்பத்தின் மீதும் உள்ள மரியாதை காரணமாகத்தான் இந்த விஷயங்களைச் சொன்னேன். பொதுவாக எவருக்கும் சொல்லமாட்டேன். நான் சொன்னவற்றை தகவலா மட்டும் வைத்துக்கொள். என்னை போலீஸ் நிலையத்துக்கு நடக்க வைத்துவிடாதே" என்றார், எச்சரிக்கையும், வேண்டுகோளும் கலந்த குரலில்.

"பலி கொடுப்பதென்றால் பூஜை ஏதும் நடத்த வேண்டாமா? வெறுமனே பலியிட்டால் போதுமா?"

"யார் சொன்னது? பூஜை நடத்த வேண்டும்."

நீண்ட பெருமூச்சுக்குப் பின் அருண் கேட்டான்: "பூஜையைக் கோவிலில்தான் நடத்த வேண்டுமா?"

"அவசியமில்லை. பூஜையை மனம் உகந்த இடத்தில் நடத்திவிட்டு கோவிலில் பலியைக் கொடுத்தால்கூடப் போதுமானது. பொங்கலை எங்கோ செய்துவிட்டு சாமி முன்னே படைப்பது போன்றதுதான் இதுவும்."

"அப்படியானால் ஏதாவது தடயம் இருக்குமா?"

"இருக்கணும்" என்றவர், கொஞ்ச நேரம் கண்களை மூடிவிட்டு சொன்னார்: "ஆனா, ஒரு விஷயம் எனக்கு உறுத்தலாகவே இருக்கு..."

"என்னது?" அருண் கேட்டான்.

அவர் பதில் சொன்னார்.

அது அருணையும்கூட ஒரு கலக்குக் கலக்கியது!

## 10

**கை**ரேகை சோதனைக் கூடத்திலிருந்து சந்திரனை அழைத்துக்கொண்டு வெட்டுண்ட காளி கோவிலுக்கு விரைந்தான், அருண்.

கோரிப்பாளையத்திலிருந்து அழகர் கோவிலுக்குப் போகும் சாலையில் நெருக்கமான கடைகளும், வணிக மையங்களும், வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைந்த வெளி தாண்டி வெறும் கருவேல மரங்களின் அடர்த்தியாய் தென்பட்டன. ஊரைவிட்டு வெகுதூரம் விலகி வந்துவிட்டது புரிந்தது. அடுத்த இரண்டாவது கிலோமீட்டரில் கோவில்.

சில மரங்கள்... அடுத்து சிறு திறந்தவெளி. அங்கே கோவில்.

கொடூரமான கோலத்தில் காளி நின்றிருக்க, மழை வெயில் படாமல் இருக்க கட்டப்பட்ட சிறிய கல் மண்டபம். சூலத்தில் புதிய எலுமிச்சம்பழங்கள்.

அருண் வியந்தான். அங்கே காவலுக்கு நின்றிருந்த பசுபதியை ஏறிட்டான்.

"சார்... இப்போ நிறைய ஜனங்கள் இங்கே வரத் தொடங்கிட்டாங்க" என்றார்.

பசுபதியின் நெற்றியிலும் குங்குமத் தீற்றல்.

அருணுக்கு சிரிப்பு வந்தது.

"முன்பெல்லாம் யாருமே வர்றதில்லைன்னு சொன்னாங்க."

"ஆமா சார். காளி இரண்டு பலி வாங்கி ரத்தம் குடிச்சதில் பயம். கொஞ்சப் பேர் பொங்கல் வைக்கலாமான்னுகூடப் பேசிக்கிட்டாங்க. இன்னும் ஒரு மாசத்துக்கு எதுவும் கூடாதுன்னு சொல்லி விரட்டிட்டேன்."

"சந்தேகத்துக்கு இடமா யாரும்..."

"நிறையப் பேர் வர்றாங்க. சாமி கும்பிட்டுப் போறாங்க. யாரைச் சந்தேகப்படுறது?"

"போலி சாமியார் மாதிரி யாராவது?"

"அப்படி ஒருத்தரும் வரலை சார்..."

உதட்டைப் பிதுக்கிக்கொண்டான், அருண்.

சந்திரன் பக்கமாகத் திரும்பி, "பிணத்தை எடுத்த அன்னிக்கு நீங்க வந்திருந்தீங்க இல்லையா?" என்று கேட்டான்.

"ஆமா சார்."

"கைரேகை தவிர வேறு எதுவும் கிடைக்கலையா?"

"கிடைக்கலை சார்."

"ரத்தம் எங்கெல்லாம் எடுத்தீங்க?"

"பீடம், சூலத்தைச் சுற்றி."

"பரிசோதனை முடிவைப் படிச்சுப் பார்த்தேன். பூஜை எதுவும் நடந்த மாதிரியான தடயங்கள் இல்லை. ஆனா, பக்கத்துல எங்கேயாவது பூஜை நடந்திருக்கணும்" என்றான், அருண்.

இருவரும் சுற்றிலும் தேடினார்கள்.

சகலமும் தேடிவிட்டு மெல்ல நடந்து முள்செடிகளின் ஊடே நகர்ந்து நகர்ந்து ஒரு சுடுகாட்டின் அருகில்

வந்துவிட்டார்கள்.

சிறியதொரு வெளி.

அங்கே உடைத்துக் கலைக்கப்பட்ட ஒரு வேள்வி பீடம்.

அருண், வியந்து அதனருகில் ஓடினான்.

முக்கோணமாக செங்கல்களால் அமைக்கப்பட்டு நடுவில் பள்ளம். எரிந்து அணைந்திருந்த சுள்ளிகள், சாம்பல் கரி கொஞ்சம்.

அருணின் முகம் மலர்ந்தது.

சந்திரன் தயாராகக் கொண்டுவந்திருந்த உபகரணங்களின் உதவியோடு அவற்றை சோதனைக்கு அள்ளத் தொடங்கினான்.

அதன்பிறகும் அந்தப் பகுதியில் இன்னும் ஒரு மணி நேரம் சுற்றினார்கள், வேறு ஏதாவது கிடைக்குமா? என்று.

வேறு எதுவும் கிடைக்கவில்லை.

கோவிலுக்குத் திரும்பினார்கள்.

பசுபதி ஓர் இளைஞனுடன் பேசிக்கொண்டிருந்தான். அந்த இளைஞன் அருணைப் பார்த்ததும் எழுந்து நின்று “வணக்கம் சார்” என்றான், மரியாதை கலந்த குரலில்.

“சார்! இவர் பெயர் விஜயபாஸ்கர். கதை எல்லாம் எழுதுவாராம்” என்று அறிமுகம் செய்து வைத்தார், பசுபதி.

அருண் தீவிர சிந்தனையில் இருந்ததால் அதை ஏற்கும் மனோநிலையில் இல்லை.

குறிப்பறிந்து விடை பெற்றுக்கொண்டு நகர்ந்துவிட்டான்.

அருணுடைய அடுத்த நோக்கம் சிலையின் பீடத்தை ஆராய்வதாக இருந்தது.

முதலில் சூலத்தின் அடியிலும் அதனருகில் இருந்த கற்களை நகர்த்தியும் தேடினார்கள்.

ஒன்றும் கிடைக்கவில்லை.

"சிலையை நகர்த்த முடியுதான்னு பாருங்க" என்றான், அருண், பசுபதியிடம்.

"அது... வந்து..." பசுபதியிடம் நிறைய தயக்கம். கூடவே கொஞ்சம் பயம்.

அருணுக்கு எரிச்சல் வந்தது.

"நகருய்யா... நானே பார்க்கிறேன்."

"சார்... வேணாம் சார். நரபலி கொண்ட காளி. அதை நகர்த்துவது நல்லதில்லை" என்றார், எச்சரிக்கை செய்யும் விதமாக.

"என்ன முட்டாள்தனம்?" என்று உள்ளே நடந்த அருண், சிலையைச் சுற்றிலும், சிலையின் அடியிலும் டார்ச் அடித்து உற்றுப் பார்த்தான்.

அவன் முகம் மகிழ்வாய் விரிந்தது.

"சந்திரன், பசுபதி கொஞ்சம் இங்கே வாங்க."

இருவருமே ஓடிவந்தார்கள்.

"சிலை தரையோடு பூசப்படலை. கொஞ்சம் இந்தப் பக்கமா சாயுங்க."

சந்திரனும், பசுபதியும் சிலையின் கழுத்தில் கை வைத்து ஒருப்புறமாக இழுக்க, சிலையின் அடிப் பக்கமாகக் கையை விட்டுத் துழாவிய அருண் அதை வெளியே எடுத்தான்.

ஐந்து அங்குல சதுரத்தில் ஒரு செப்புத் தகடு.

"சந்திரன்! இதையும் எடுத்துக்கோங்க" என்றவன் சில விநாடிகள் யோசித்து, "வேண்டாம். இது இங்கேயே இருக்கட்டும்" என்று அதே இடத்தில் வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

"ஏன் சார்?"

"பசுபதி! அப்புறம் சொல்றேன். சந்திரன்! நீங்க உடனடியா போய் இன்னிக்கு எடுத்த எல்லாவற்றையும் பரிசோதனை

பண்ணி எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமா விபரங்களைக் கொடுங்க. பசுபதி! இன்றிலிருந்து இந்தக் கோவில்ல நானே இருக்கிறேன். நீங்க கிளம்புங்க" என்று படபடவென்று ஆணைகள் பிறப்பித்தான்.

நரபலி மர்மத்தின் மையத்தை நோக்கி நகரும் உற்சாகம் தெரிந்தது அவன் குரலில்.

எல்லாம் சந்திரன் அறிக்கை கொடுக்கும் வரை நீடித்தது.

பரிசோதனை அறிக்கை அருணை இன்னும் குழப்பி அவன் புருவங்களை மேலெழுப்பியது.

## 11

**கோ**விலே கதி என்று அருண் கிடந்தான். அந்த நாட்களில் அவனுக்குப் பழக்கமானான், விஜயபாஸ்கரன்.

அந்த இளைஞனுக்கு மிஞ்சி மிஞ்சிப் போனால் இருபத்தைந்து வயது இருக்கும். கண்களில் நிறைய கனவு இருந்தது. பேச்சில் நிறைய ஞானம் தெரிந்தது. சவரம் செய்து வழுவழுப்பாய் முகம். சுத்தமான வார்த்தைகள் தவழ்ந்து விளையாடின.

நிறைய கதைகள் எழுதுவானாம். அவ்வப்போது ஏதாவது பத்திரிகைகளில் பிரசுரமாகுமாம்.

அவனுடைய சுவாரசியமான பேச்சு அருணுக்குப் பிடித்தது. அதனாலேயே எப்போதாவது அங்கு வரும் வழக்கம் உள்ள விஜயபாஸ்கரை தின்சரி வரச்சொல்லி பேசிக்கொண்டிருந் தான்.

"என்ன படிச்சிருக்கீங்க?"

"எம்.ஏ."

“வேலை?”

“தேடிக்கொண்டிருக்கிறேன்.”

“இங்கே வரும் பழக்கம் எப்படி?”

“ஒரு கிலோமீட்டர் தள்ளித்தான் வீடு. முன்பு படிக்கிற காலத்தில் சாயங்காலங்களில் வருவேன். அப்புறம் வீட்டில் இருக்க போரடிக்கும் நேரங்களில் வரத்தொடங்கினேன். எப்போதுமே அமைதியாய் ஜன நடமாட்டம் இன்றி இருக்கும் இந்தத் தனிமை எனக்குப் பிடிக்கும்.”

“உம்... முன்பு எப்போதாவது இங்கே பலி கொடுத்திருக்காங் களா?”

“பார்த்ததில்லை.”

அருண் அங்கேயே இருந்தான். சுருங்கச் சொன்னால், காத்திருந்தான்.

அந்தத் தகடை வைத்தவன் நிச்சயம் எடுக்க வந்தாக வேண்டும். வரட்டும் என்று இருந்தான்.

இரண்டு நாள், மூன்று நாள், நான்கு நாள் ஆனது. யார் யாரோ வந்தார்கள். காளியைக் கும்பிட்டார்கள். எலுமிச்சம் பழத்தைச் சூலத்தில் குத்தினார்கள். சிலர் குத்தி, எடுத்துக் கொண்டார்கள். பீடத்தில் குங்குமம்.

எவரிடமும் வித்தியாசம் தெரியவில்லை. ஒரு தீவிர கணத்தில் இங்கு வருபவர்களில் வித்தியாசமானவன் என்று பார்க்கவேண்டுமானால் அது விஜயபாஸ்கர் ஒருவன்தான் என்றுகூட எண்ணினான்.

விஜயபாஸ்கரை, மார்பில் முழுக்க பூசிய விபூதியுடனும், மண்டை ஓட்டு மாலையுடனும், “ஓம்... ரீம்... கிரீம்...” என்று மந்திர உச்சாடனை செய்து வெட்டரிவாளால் பலி கொடுக்கும் பயங்கரப் பூசாரியாகக் கற்பனை செய்து பார்த்தபோது உள்ளுக்குள் சிரிப்பு வந்தது.

இரவு, பகல் பாராமல் அருண் அங்கேயே கிடந்ததற்கு ஐந்தாம் நாள் பலன் கிடைத்தது.

அன்று அருணும், விஜயபாஸ்கரும் கோவில் வாசல்படியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். பகல் மணி பதினொன்றரை இருக்கும்.

உடல் முழுக்க ஜடாமுடி அணிந்த சாமியார் ஒருவர் முட்செடிகளிலிருந்து வெளிப்பட்டார்.

அவரைப் பார்த்ததும் பேச்சை நிறுத்தினார்கள். இருவரும் அவரையே பார்க்கத் தொடங்கினார்கள். அவரின் பார்வை இவர்கள் இருவர் மீதும் விழுந்தது.

சாமியார் மெல்ல தலையை அசைத்தார்.

காளியை நோக்கிக் கையை உயர்த்தினார். ஏதோ முணுமுணுத்தார். பிறகு கோவிலை ஒருமுறை வலம் வந்தார். மெல்ல நகர்ந்து முட்களினூடே நடந்து போகத் தொடங்கினார்.

அவர் போன திசை அருணுக்கு வியப்பைத் தந்தது. பூஜை நடந்த இடம் அந்த திசையில்தான் இருக்கிறது.

பார்வையிலிருந்து அவர் மறையும் வரையிலும் பேசாமல் இருந்த அருண், பிறகு வேகமாகச் செயல்படத் தொடங்கினான்.

"விஜயபாஸ்கர்! கொஞ்ச நேரம் இங்கேயே இரு. இதோ வந்திடுறேன்" என்று எழுந்தவன், தானும் செடிகளின் ஊடே காலடிச் சலசலப்பு இல்லாமல் கவனமாக அந்த சாமியாரைப் பின்தொடர்ந்தான்.

சாமியார் அக்கம் பக்கம் பார்க்காமல் நேரே நடந்தார். அருண், பின்தொடர்ந்துகொண்டே இருந்தான்.

பூஜை நடந்த இடம் தாண்டி நடந்த சாமியார், அடுத்திருந்த சுடுகாட்டையும் கடந்து சாலைக்கு வந்தார்.

தொடர்ந்து நேராக நடந்தார்.

மனதுக்குள் ஏற்பட்ட சலிப்பைப் பொருட்படுத்தாமல் அருணும் தொடர்ந்து நடந்தான்.

திடீரென்று எதிரே சைக்கிளில் வந்தார், காவலர் குமாரசாமி. அருணைப் பார்த்ததும் சட்டென்று சைக்கிளை விட்டிறங்கி விறைப்பாக 'சல்யூட்' அடித்தான்.

அருண் இப்போதைக்கு அதை கவனிக்கும் மூடில் இல்லை. அவனது கவனமெல்லாம் அந்த ஜடாமுடி சாமியார் மீதே இருந்தது.

"குமாரசாமி! நான் இந்த சாமியாரை பின்தொடர்ந்து போயிட்டு வர்றேன். நீ கோவில்ல போய் இரு. அங்கே விஜயபாஸ்கர் இருக்கிறான்."

"சார்... நானும் அது சம்பந்தமாகத்தான் அவசரமாக வந்தேன்..."

"என்ன?"

"விஜயபாஸ்கர் பற்றி நீங்க விசாரிக்கச் சொல்லி இருந்தீங்களே... நல்லா விசாரிச்சுட்டேன். முதல்ல அவன் வீடு இருக்கிறதாச் சொன்ன இடமே பொய்."

அருண் சட்டென்று நிமிர்ந்தான்.

"ஆமா சார்... அப்புறம் தேடி விசாரிச்சு அவன் வீட்டைக் கண்டுபிடிச்சிட்டேன்."

"எப்படி?"

"மூணு நாள் அவன் பின்னாலேயே போய்க் கண்டு பிடித்தேன்."

"அற்புதம்."

"அவங்க வீட்டில் அவனைத் தண்ணி தெளிச்சு விட்ட மாதிரித்தான் சார் தெரியுது..."

"புரியலை..."

"பத்தாவது வகுப்பு வரையில் ஒழுங்காப் படிச்சானாம்.

### பால்சோறு

**வி**ருதுநகரில் இரவு சாப்பாட்டில்சோற்றில்மூழ்க மூழ்கப் பால் ஊற்றிச் சாப்பிடுகிறார்க்ள். கூட்டாக பக்கோடா, மிக்சர், வாழைப்பழம் வைத்துக்கொள்கின்றனர்.

அப்புறம் தியானம், அது இதுன்னு என்னவெல்லாமோ செய்யத் தொடங்கிட்டானாம், புத்தி சுவாதீனம் இல்லை யோன்னு முதலில் நினைத் தார்களாம். கல்யாணம் பண்ணி வைத்தால் சரியாகி விடும்னு நினைத்து அதுக்குக் கூட ஏற்பாடு பண்ணினாங் களாம். இவன் பிடிவாதமா மறுத்திட்டானாம்."

"ஏனாம்?"

"கல்யாண சமாச்சாரம் எல்லாம் சிறை. நான் வாழ நினைப்பது ராஜயோக வாழ்க்கை, அப்படி இப்படின்னு பினாத்துவானாம்."

குமாரசாமி சொல்லச் சொல்ல அருணுக்குள் என்னவோ எகிறியது.

சட்டென்று அந்த சாமியாரை அப்போதைக்கு மறந்த வனாக "குமாரசாமி! சைக்கிளை சீக்கிரமா கோவிலுக்கு விடு" என்று கத்தினான்.

குமாரசாமிக்கு எதுவும் புரியவில்லை. வேகமாக சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான்.

அருணின் மனம் அசுர வேகத்தில் திட்டமிட்டது:

தினமும் காலையிலும், மாலையிலும் சிலையைத் தூக்கி தகடு இருக்கிறதா என்று பார்த்துக்கொள்வான், அருண்.

'காலையில் பார்த்தபோது இருந்தது. பார்க்க வேண்டும். என் மனதில் ஓடும் எண்ணம் மட்டும் சரியாக இருக்குமானால், பாலுக்கு நானே பூனையைக் காவல் வைத்துவிட்டு... சே!'

கோவிலைச் சென்றடைந்தனர்.

அதே இடத்தில் உட்கார்ந்திருந்தான் விஜயபாஸ்கர்.

அருணுக்கு வியப்பாக இருந்தது.

சைக்கிளில் இருந்து இறங்கினான்.

சிலையை நோக்கி வேகமாக நடந்தான்.

"என்ன சார்... யாரையோ பின்தொடர்ந்து போனீங்க. வேறு யாரையோ கூட்டிட்டு வர்றீங்க" என்ற விஜயபாஸ்கரின் நகைச்சுவையை ரசிக்கும் நிலையில் இல்லை அருண்.

"நீங்க ஏதோ கொஞ்சம் மாற்றமா இருக்கிற மாதிரி தெரியுது. நான் கிளம்புறேன் சார்" என்று புறப்பட யத்தனித்த விஜயபாஸ்கரிடம் "கொஞ்சம் இரு" என்று கூறிவிட்டு "குமாரசாமி! இந்த சிலையை நகர்த்து" என்று ஆணையிட்டான், அருண்.

சிலையின் அடியில் கை வைத்தவனின் முகத்தில் வியப்பு.

## 12

ஓங்கி விழுந்த அடியைத் தாங்கமுடியாமல் மூலையில் போய் விழுந்தான், விஜய்பாஸ்கர்.

"நான் யாரையும் கொலை செய்யலை சார்" என்றான் தேம்பியவாறே.

"ராஸ்கல்! இன்னுமா பொய்" என்று அவனை மிதிக்கப் போனான், அருண். "டேய் விஜயபாஸ்கர்! இனி பொய் உனக்கு உதவாது. இங்கே பார்! இது போலீஸ் விசாரணை. உன் வீடு அல்ல. உண்மையைப் பேசு."

அவன் பேசவில்லை.

'யாரோ, எவனோ, எந்த சாமியாரோ என்று அலைய, கடைசியில் இப்படி ஒருத்தனே இவ்வளவு பண்ணியிருக்கான் என்றால் எவ்வளவு ஏத்தம் வேணும்?' அருணுக்குள் ஆத்திரம்

நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் ஊரிலுள்ள ஒரு தெருவின் பெயர் வம்பளந்தான் பாறைத் தெரு!

முட்டியது. ஒவ்வொரு துளி ரத்தமும் துடித்தது.

"சொல்லுடா" ,என்றான் ஓங்கிய குரலில்.

"நான் கொல்லலை."

"நீ கொல்லலைன்னா, காளி சிலைக்குக் கீழே இருந்து ஏன் தகடை எடுத்தே?"

விஜயபாஸ்கர் விழித்தான்.

"தகட்டில் இருந்த ரேகையும் உன் கைரேகையும் ஒண்ணுன்னு தெரிஞ்சாச்சு. இனி எதையும் மறைச்சு பயனில்லை. புரியுதா?"

அதற்கும் பதில் சொல்லாமல் அவன் வெறித்தபடி யோசிக்க, "சொல்லுடா... பொறுக்கி நாயே" என்றபடி ஓங்கி ஓர் உதை விட்டான்."

கொஞ்ச நேரம் அழுதான், விஜயபாஸ்கர். பிறகு "சும்மாதான் எடுத்தேன்" என்றான்.

"அங்கே தகடு இருந்தது உனக்கு எப்படிடா தெரியும்?"

"பார்த்தேன்."

"எப்போ?"

பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான்.

"நீ சரிப்பட்டு வரமாட்டே. பசுபதி! இவன் துணிகளைக் கழற்றுங்க. ஒழுங்கா கவனித்தால்தான் பேசுவான்."

இத்தனை நாள் தன்னைக் குழப்பிய கொலைகாரனைப் பிடித்துவிட்ட திருப்தி அருணின் முகம் முழுக்க இருந்தது.

"மரியாதையா கேட்கிறேன். சொல்லு. இன்னும் அடி கிடி பட்டு உடம்பைக் கெடுத்துக்காதே. உண்மையைச் சொல்லு."

விஜயபாஸ்கர் கொஞ்ச நேரம் யோசித்தான்.

"என்னடா யோசனை? என்ன பொய் சொல்லலாம்னா? பொய் எதுவும் இனி உதவாது, ஞாபகம் வச்சுக்கோ."

"நான் காளியின் உத்தரவுக்குக் காத்திருந்தேன்" என்றான், அமானுஷ்யமான குரலில்.

பிறகு மெல்லச் சொன்னான்: "நான்தான் கொன்னேன்."

"முண்டம்! இதை முதல்லேயே சொல்லித் தொலைக்க வேண்டியதுதானே? உம்... சொல்லு."

"எனக்கு சின்ன வயசில் இருந்தே ஆவி, பூஜைகளில் நம்பிக்கை உண்டு. அது சம்பந்தமான புத்தகம் நிறைய படிப்பேன். உடம்பை வருத்தி நிறைய தியான்ம் எல்லாம் செய்வேன்."

"அப்புறம்..."

"அமாவாசை, பவுர்ணமின்னு நிறைய தடவை காடுகள்ல போய் பூஜை எல்லாம் செஞ்சிருக்கேன். வீட்டில் கொஞ்சம் இதுபற்றி தெரிஞ்சதும் கண்டிச்சுப் பார்த்தாங்க. எவ்வளவோ அறிவுரை சொன்னாங்க. நான் கேட்கவில்லை. எனக்கு உறவு, பந்தம், பாசம் எதிலும் நம்பிக்கை கிடையாது. நான் வாழ நினைத்த வாழ்க்கையே வேறு."

"அது என்ன வாழ்க்கை?"

"அப்பப்போ காளி என் கனவில் வருவா. எனக்குக் கட்டளைகள் தருவா. அதுபடிதான் நடப்பேன். அவள் கேட்டாள்னு ஒருமுறை என் வலது கால் சுண்டுவிரலையே நறுக்கி அவ முன் வீசி இருக்கேன்" என்று தன் வலது காலை விஜயபாஸ்கர் நீட்ட, எல்லோரும் அப்போதுதான் கவனித்தார்கள்.

"ஓ... அத்தனை பயங்கரம்!"

கொஞ்சம் தண்ணீர் கேட்டான். குடித்துவிட்டுத் தொடர்ந்தான்.

"ஒருநாள் பகலில் என் கனவில் காளி வந்தாள். பகலில் வருவது அதுதான் முதன்முறை. வந்தவள் எதுவும் பேச வில்லை. எனக்கு ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை. 'பேசு தாயே... பேசு தாயே... என் மீது என்ன கோபம்?' என்றெல்லாம் கேட்டுக் கதறினேன்."

"காளி பேசினாளா?"

"இல்லை... அவள் என்னிடம் ஓர் ஓலையை நீட்டினாள். அதில் ஒரு கவிதை இருந்தது. அதை வாசித்தேன். காளி மறைந்துவிட்டாள்."

"கவிதையா..."

காவலர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"உம்... இப்போதும் அந்த வரிகள் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு.

அது—

**அடவிப் புதரின் நடுவண் பசியை**
**எண்ணிட மறந்த கூடல் மாந்தரில்**
**குழவிப் பிணத்தோடு சூலியின் ரத்தம்**
**என்னடி வைக்க எண்திசை தருவேன்**

"இதுதான் கவிதை. நான் கனவு கலைந்து விழித்தேன். கவிதை வரிகளைத் தவிர மற்ற எதுவும் நினைவில் இல்லை. அப்புறம் அந்த வரிகளுக்கு அர்த்தம் பார்த்தேன். என் கனவு களுக்கும் ஆசைகளுக்கும் காளி பதில் கூறி இருந்தது போல் இருந்தது."

மூச்சிறைத்தது விஜயபாஸ்கருக்கு.

மற்றவர்கள் மவுனம் காத்தார்கள்.

"திசை எட்டும் என் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்கிற ஆசை. நான் காளியைத் தொடர்ந்து பூஜை செய்து வேண்டியது எல்லாம் அந்த ஒன்றுக்காகத்தான். நடுக்

காட்டில் கேட்பாரற்று நிற்கும் அந்தக் காளிக்கு தலைச்சன் சூலியைப் பலி கொடுத்து ரத்தத்தை அவள் காலடியில் கொட்டும் மதுரை வாசிக்கு எட்டுத் திசைகளின் ஆளுமையும் தருவேன் என்று கவிதை மூலம் வாக்களித்துவிட்டாள். காளி என்னிடம் மட்டும் அதனைச் சொன்னது என் பக்தியின் பலன். அதை நிறைவேற்ற வேண்டியது என்னுடைய கடமை. அதனால் தான் நிறைவேற்றினேன்...” சொல்லிக்கொண்டே போனான், விஜயபாஸ்கர்.

ஆத்திரமாய் குதித்தான், அருண்.

“முட்டாள்... நடிக்கிறான். காளி, கனவு என்று பசப்புகிறான். புத்தி சுவாதீனமில்லாதவன் போல் நாடகமாடி தப்பிவிட நினைக்கிறாய். உன்னை விடமாட்டேன்.”

அருணின் உடல், பதற்றத்தில் மேலும் கீழுமாய்த் துடித்தது.

அப்போது வக்கீல் ரமணி வந்தார். அவருக்கு ஓரளவு புரிந்துவிட்டது.


அவர் கண்களில் சிவப்பேறியது.

“அமைதியாக இருங்க ரமணி” அருண் சொன்னான்.

“இல்ல அருண்! என்னால் உணர்ச்சிவசப்படாம இருக்க

## புகழ்மாலை சூட்டுவோம்!

தென்னாட்டுக் காந்தியாக
திக்கெட்டும் புகழைப் பெற்று
எந்நாடும் போற்றும் வண்ணம்
இறவாத நிலையைப் பெற்றார்!



எந்நாளும் நினைக்கவே
இதயத்தில் கோவில் கட்டி
பொன்னான தலைவருக்கு
புகழ்மாலை சூட்டி நிற்போம்!

—புலவர் ப. தேவகுரு,
தேவதானப்பட்டி.

## வழுக்குபாறை

மேற்குத்தொடர்ச்சி மலையில் காட்டுப் பகுதி திருவில்லிபுத்தூரில் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. அங்கு வழுக்குபாறை, பேச்சியம்மன் கோவில், அழகர்மலை, அய்யனார் அருவி, மொட்டைமலை என பல இடங்கள் உள்ளன. சாம்பல் நிற அணில், சிறுத்தை, மான், யானை, ராஜநாகம் ஆகியவை இந்தக் காடுகளில் வாழுகின்றன. இங்கு பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதிக்குச் செல்லும் வழியில் நிறைய மாந்தோப்புகள் உண்டு.

முடியலை. நான் கோர்ட்டுல பேசியே ஆகணும், என் காஞ்சனாவுக்காக... என் காஞ்சனாவுக்காக..." குரல் உடையத் தொடங்கியது ரமணிக்கு.

அருண் அவரை மெல்ல தட்டிக்கொடுத்தான். ஆசுவாசப்படுத்த முயன்றான்.

கோர்ட்டில் ஏக கூட்டம். எல்லோருக்கும் நரபலி கொலையாளியைப் பார்க்க ஆர்வம்.

விசாரணைகள் தொடர்ந்தன.

விஜயபாஸ்கரின் வாக்குமூலத்தைக் கேட்ட நீதிபதியின் முகத்தில் இரக்கம் துளியும் தென்படவில்லை. வழக்கை சாதகமாக்கிக்கொள்ள நினைத்த விஜயபாஸ்கரின் வக்கீல், புத்தி சுவாதீனம் பற்றிய சந்தேகத்தை எழுப்பினார்.

அதற்குப் பிறகுதான் ரமணியின் பங்கு வழக்கில் வந்தது. வழக்கை அக்கு வேறு ஆணி வேறாக அலசினார்.

அருண் மட்டுல்ல, யாருமே எதிர்பார்க்கவில்லை, கோர்ட்டில் ரமணி அப்படிப் பொங்கி எழாத குறையாகப் பேசுவார் என்று.

நீதிபதி உள்பட சகல கோர்ட்டாரின் கவனத்தையும் தன் பக்கம் வசியப்படுத்திக்கொண்டு பேசினார், ரமணி.

இதுபோன்ற வேறு வழக்குகளில் பல்வேறு நீதிமன்றங்களில் தரப்பட்ட அதிகபட்ச தண்டனை விவரங்களைப்

பட்டியலிட்டுக் காட்டி நீதிபதியின் புருவங்களை உயர வைத்தார்.

அவர் பேச்சில், மனைவி காஞ்சனாவை இழந்த சோகம் தெரியவில்லை. அவள் மீது அவர் கொண்டிருந்த காதல் + அன்பு வெளிப்பட்டன.

விஜயபாஸ்கருக்கு அதிகபட்ச தண்டனை உறுதிப்படும் நிலை...

அவன், ரமணியைப் பார்த்த பார்வை அத்தனை பயங்கர மாக இருந்தது.

## 13

**போ**லீஸ் தரப்பில் இருந்து எடுத்து வைக்கப்பட்ட தெளிவான சாட்சிகள், தடயங்கள், கைரேகை நிபுணரின் ஒப்புதல் இவைகளோடு ரமணியின் பேச்சும் சேர, விஜயபாஸ்கருக்கு தண்டனை விதிப்பதென்பது தவிர்க்க இயலாதத்தாகிவிட்டது. மரண தண்டனை அளித்து தீர்ப்பு கூறினார், நீதிபதி.

அருணின் கைகளைப் பிடித்துக்கொண்டு ரமணி கண்ணீர்விட்டார்.

"அருண்! காஞ்சனா சார்பில் என் நன்றிகள். எனக்கு இப்ப கொஞ்சம் திருப்தியா இருக்கு அருண். ஏதோ கைம்மாறு செய்திட்டதா நினைக்கிறேன்..." என்று தழுதழுத்தார்.

அருண் ஆறுதல்படுத்தினான்.

"நான் இனிமேல் கோர்ட்டுக்குப் போகப்போவதில்லை அருண். காஞ்சனா நினைவுடனேயே கொஞ்ச காலம் வாழ்ந்துட்டுப் போயிடலாம்னு இருக்கேன்."

"ரமணி! நீங்க ரொம்ப பதற்றமா இருக்கீங்க. இப்போ

வீட்டுக்குப் போங்க. ஒருநாள் சாவகாசமா வர்றேன். நிறையப் பேச்லாம்" என்று அவரை அனுப்பிவிட்டுக் கிளம்பினான்.

"அருண்!" என்று கூப்பிட்டார் துணைக் கமிஷனர், கோபால்.

திரும்பினான்.

"நாலை மாலை என் வீட்டுக்கு நீ வர்றே."

"சரி சார்."

"இது உனக்கு மட்டுமான தனிப்பட்ட அழைப்பு."

"சார்..."

"நீ வர்றே. இப்போ போய் ஓய்வு எடு" என்று அனுப்பி விட்டார்.

வீட்டுக்கு வந்தான் அருண். நடந்தவைகளை நினைத்துப் பார்த்தான். விறுவிறு என்று ஒரு சினிமா ஓடி முடிவு வந்துவிட்டது போல தோன்றியது.

ஆனால், அடிமனதில் சில உறுத்தல்கள் இருக்கத்தான் செய்தன. அவனால் நிம்மதியாகப் பெருமூச்சுவிட முடியாத நிலையில் இருந்தான்.

"பாராட்டுகள்" என்று கை குலுக்கினார் கோபால்.

அருண் பதில் பேசவில்லை.

"அருண்! டி.ஜி.பி.கூட உனக்குப் பாராட்டு தெரிவிக்கச் சொன்னார்.

"எதுக்கு சார் இந்த மாதிரியெல்லாம்..."

கோபால் முகம் மாறினார்.

"அருண்! என்ன... எதிலும் பிடிப்பு இல்லாம இருக்கிறே? என்ன ஆச்சு உனக்கு? நீ எவ்வளவு பெரிய காரியம் பண்ணி இருக்கிறே..."

"சார்... உங்ககிட்ட தனியா பேசணும்னுதான் நினைச்சேன்.

இன்னிக்கு இங்கே நான் வந்ததுக்கு அதுதான் முக்கிய காரணம்."

கோபால் அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

"சொல்லு."

"எனக்கு என்னவோ வழக்கு இன்னும் முடியலைன்னு தோணுது சார்..."

"என்ன சொல்றே?"

"ஆமா சார்... சில விஷயங்கள் உறுத்துது. காஞ்சனா இறந்தப்போ பீடத்துலேயும் சூலத்துலேயும் கைரேகை கிடைத்தது. அது விஜயபாஸ்கர் ரேகையோட ஒத்துப் போகலை."

"ஆனா, தகட்டில் இருந்த ரேகை ஒத்துப்போச்சே!"

"அது ஒத்துப்போச்சுதான். இன்னொரு விஷயம், பூஜை பொருட்கள் சோதனையில் அது நாகம்மா மரணத்தின் போதுதான் செய்யப்பட்டு இருக்கணும்னு சொல்லுது."

அருணையே பார்த்துக்கொண்டிருந்தார், கோபால்.

"ரெண்டாவது பலிக்கு அவன் எங்கே பூஜை செய்தான் என்கிற கேள்விக்கு விடை இல்லை. எதிரி தரப்பில் சரியான வக்கீல் இல்லை. அந்தக் காரணத்தால் நாம் விஜயபாஸ்கர் மேல் முழுப் பழியையும் ஏற்றிவிட்டோமோ என்று தோன்றுகிறது."

"உம்..."

"நரபலி சம்பந்தமா எனக்குத் தெரிஞ்ச சாமியார் ஒருத்தர்கிட்டே விசாரிச்சேன். அவர் சொன்ன ஒரு விஷயம் என்னை ரொம்ப உறுத்திச்சு. எவ்வளவு கொடூர தேவதையானாலும் பதினைந்து நாள் இடைவெளியில் இரண்டு நரபலியை ஏற்காதுன்னு சொன்னார். நரபலிங்கிறது ரொம்பப் பெரிய தாக சாந்தி. அது இப்படி அமாவாசையில் ஒன்றும்

## உலக சாதனை

டெல்லியைச் சேர்ந்த பாபு என்ற இளைஞர், ஒரே இடத்தில் ஆடாமல் அசையாமல் 40 மணி நேரம் நின்று, உலக சாதனை செய்திருக்கிறார்!

அவர் மகாத்மா காந்தி போல உடை அணிந்து, கையில் ஒரு தடி பிடித்துக் கொண்டு, 40 மணி நேரம் அசையாமல் நின்றார்! சாப்பிடக்கூட இல்லை!!

உடனடியாக பவுர்ணமியில் ஒன்றுமாக நடந்திருப்பது நம்ப இயலாத விஷயம்னு அவர் சொன்னார்."

கோபால் எதுவும் பேசாமல் கேட்டுக்கொண்டே வந்தார்.

"அதோடு விஜயபாஸ்கரும் ஒரே ஒரு பலிதான் கொடுத்தேன், இன்னொன்றைப் பற்றி எனக்குத் தெரியவே தெரியாதுன்னு சொல்லி அழுதான்."

"அப்படிப் பார்த்தால் முதலில் அவன் எதுவுமே செய்யவில்லை என்றுதானே சொன்னான்?"

"ஆமா... ஆனால், அடித்துக் கேட்டதும் காளி கனவில் வந்த கதையை சொல்லும்போது 'ஒரு கொலைதான் செய்தேன், காளி ஒரு பலிதான் கேட்டாள்' என்று தெளிவா சொன்னானே. அப்புறம் தொடர்ந்து அடித்ததும் இரண்டையும் தானே செய்ததாக ஒப்புக்கொண்டான்?"

கோபால் யோசித்துப் பார்த்தார்.

"முடிவாக என்னதான் சொல்றீங்க?" என்றார்.

"நாகம்மா கொலையை விஜயபாஸ்கர்தான் செய்திருக்கிறான். அதில் சந்தேகமில்லை. ஆனால், இரண்டாவது நடந்த காஞ்சனாவின் கொலையில் அவன் கொஞ்சம்கூட சம்பந்தப் படவில்லை என்பது என் எண்ணம்."

கோபால் சிந்தனையில் ஆழ்ந்தார்.

எல்லா விஷயங்களையும் தொகுத்து சிந்தித்துப் பார்த்தார். சில ரேகை விஷயங்கள் குழப்பமாக இருக்கின்றன.

காஞ்சனா .பலி கொடுத்த விஷயத்தில் பூஜை நடத்தப் படவில்லை.

பதினைந்து நாளில் இரண்டு நரபலிகளை ஏற்காது என்கிறார்கள். அதோடு விஜயபாஸ்கரும் முதல் கொலையை தெளிவாக ஒப்புக்கொண்டான்.

'அறிவுகெட்டவனே! ஒரு கொலையை ஒப்புக்கொள்றேல்ல? அடுத்ததையும் ஒப்புக்கொள்றதுக்கென்ன? ஒரு கொலைக்கும் ரெண்டு கொலைக்கும் ஒரே தண்டனைதான்டா' என்று அருண் சொன்னதற்குப் பிறகு மேலும் இரண்டு அடி விழுந்ததும், காஞ்சனாவையும் தானே கொன்றதாக விஜய பாஸ்கர் ஒப்புக்கொண்டது அவருக்கு நினைவுக்கு வந்தது.

அது, அவரின் புருவங்களை நெற்றியின் மேலே ஏற்றியது.

கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார், ரமணி. முகம் முழுக்க தீவிர சிந்தனையின் படர்வு.

சமையல்காரனும் வேலைக்காரியும் உள்ளே இருந்தனர்.

ரமணி மாத்திரம் தூக்கமின்றி உலவிக் கொண்டிருந்தார். மனதில் ஏதேதோ சிந்தனைகள்.

'டக் டக்'கென்று கதவு தட்டப்படும் சத்தம்.

நடந்துகொண்டிருந்தவர் நின்றார்.

'இந்த அகால வேளையில் கதவைத் தட்டுவது யார்? அழைப்பு மணியை அழுத்தாதது ஏன்?'

தானே கதவைத் திறந்தார். பளிச்சென்று வியர்த்தார்.

"யார்? விஜயபாஸ்கரா?"

"ஆம்... நானேதான். ஜெயில்ல இருந்து தப்பிச்சு வந்துட்டேன். உங்க கணக்கைத் தீர்க்கவேண்டியிருக்கே" என்றவன், சிவந்து வீங்கிய கண்களோடு சட்டென்று உள்ளே நுழைந்தான். கதவை உட்புறமாகத் தாளிட்டான்.

# 14

துணைக் கமிஷனர் கோபாலுக்கும் அன்று இரவு தூக்கம் வரவில்லை. இனம்புரியாத குழப்பம் அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. மனம், அருண் சொன்னவைகளையே அசை போட்டது.

கடிகாரம் மூன்றுமுறை அடித்து ஓய்ந்தது. அதுகூட அவர் காதுகளில் விழவில்லை.

'சார்! அன்னிக்கு ரமணியுடன் அவர் வீட்டுப் படுக்கை அறையைத் துழாவிக்கொண்டிருந்தேன். அப்போ அவங்க டைரியை எல்லாம் படித்துப் பார்த்தேன். அதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது...' என்று தொடங்கி அருண் சொன்ன விஷயங்கள் அவருக்குள் புதுப்புது கேள்விகளை எழுப்பின.

'உண்மை வெளிப்பட்டு என் ஊகம் சரியாகும்வரை இந்த விஷயம் நம் இருவருக்குள் மட்டும் இருக்கட்டும் சார். யாரிடமும் தெரியப்படுத்த வேண்டாம். குறிப்பாக பத்திரிகைகளைப் பொருத்தவரையில் இந்த வழக்கு முடிந்து போனதாகவே இருக்கட்டும்' என்று அருண் சொல்லி இருந்தான்.

'சரி' என்று உறுதி அளித்திருந்தார், கோபால்.

அருணை நினைக்கையில் அவருக்கு பெருமையாக இருந்தது. காவல்துறைக்கு அவன் ஒரு வரப்பிரசாதம் என்று நினைத்துக்கொண்டார்.

அப்போதுதான் வந்தது அந்த தொலைபேசி.

'இந்த நேரத்தில் யார்?' என்று வியந்து எடுத்தார்.

"சார்! நான் அருண் பேசுறேன். விஜயபாஸ்கர் ஜெயில்ல

இருந்து தப்பிச்சுட்டானாம்."

அதிர்ந்தார், கோபால்.

"சார், நீங்க வீட்லேயே இருங்க... உடனே நான் வர்றேன்..."

"சரி..."

கோபாலின் இத்தனை நேர அதிதீவிர சிந்தனையை தலைகீழாகத் திருப்பிப் போட்டாற்போல் ஆக்கியது இந்தச் செய்தி.

'இது வேறு ஒரு புதிய தலைவலியா? விஜயபாஸ்கர் எப்படித் தப்பித்தான்? யாருடைய அலட்சியம் காரணமாக இருக்கும்?' யோசித்தார்.

வாசலில் வாகனம் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

விரைந்து சென்று கதவைத் திறந்தார்.

அருண்.

"என்ன அருண்? எப்படி நடந்தது?"

"தெரியலை சார். நான் உங்ககிட்டே விஷயத்தைச் சொல்லிட்டு நேரே ரமணி வீட்டுக்குப் போகலாம்னு கிளம்பி வந்தேன்."

"ரமணி வீட்டுக்கா?"

"ஆமா சார்... இப்போ ஆபத்து ரமணிக்குத்தான். அவனோட குறி இப்போ அவர் மீதுதான் இருக்கும்."

"சரிதான். அன்னிக்கு அவர் கோர்ட்டுல பேசினப்போ விஜயபாஸ்கர் அவரைப் பார்த்த பார்வையில் அவ்வளவு வெறி இருந்தது. அவருக்கு எதுக்கும் போன் பண்ணி கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கச் சொல்லலாமே..."

"முயற்சி பண்ணிப் பார்த்திட்டேன் சார். அவருடைய போன் இப்போ சரியில்லை."

விரத்தியில், விரல்களை பிசைந்துகொண்டார், கோபால்.

"சரி, நானும் வர்றேன். போகலாம்" என்று அவரும் கிளம்பினார்.

"அவன் பிடிபடும்வரை ரமணிக்கு பாதுகாப்பு கொடுத்திடலாம் சார்."

"அதுக்கு உடனே ஏற்பாடு பண்ணிடு..."

ஜீப் விரைந்துகொண்டிருந்தது.

அதிகாலைப் பனியின் குளிர்ச்சி அவர்களை மேலும் கொஞ்சம் கிழித்துக்கொண்டிருந்தது.

கதவை உள்புறம் தாளிட்ட விஜயபாஸ்கர், ரமணி சுதாரிக்கும் முன் குனிந்தான்.

அவனைப் பார்த்த அதிர்ச்சியாலும், அவன் கதவைச் சார்த்திய வேகத்தாலும் பயத்தில் உறைந்துபோயிருந்த ரமணியின் கால்களில் படாரென்று விழுந்தான்.

"சார்! கொஞ்சம் என்னைப் பேசவிடுங்க. குறுக்கே எதுவும் பேசாதீங்க... நான்தான் உங்க மனைவியைக் கொன்ற கொலைக்காரன்னு உங்க மனதில் இருக்கும் எண்ணத்தை நீக்கணும். அதற்காகத்தான முதலில் இங்கே வந்தேன். உங்ககிட்டே நான் உண்மையைச் சொல்லியே ஆகணும்."

ரமணி, மவுனமாக நின்றிருக்க, தரையில் இருந்து எழுந்தான், விஜயபாஸ்கர்.

"சார்! காளி இட்ட கட்டளையின் பேரில் நான் உயிர் பலி கொடுத்தது உண்மை. ஆனால் அந்தக் காளி மீது ஆணையாகச் சொல்றேன். உங்க மனைவியை நான் பலி கொடுக்கலை. எனக்கு அவங்க எப்படி இருப்பாங்கன்னு கூடத் தெரியாது. அவங்க பலி கொடுக்கப்படவே இல்லை."

"அப்ப..."

"போலீஸ் என்னைச் சுத்தமா நம்பலை. நீங்க கோர்ட்டுல பேசின ஆவேசம் என் கண்ணுக்குள்ளேயே நிக்குது. உங்க

மனைவி மேல நீங்க வச்சிருந்த அன்பு அதில் தெரிஞ்சது. ஆனா தப்பா என்மேல உங்களுக்கு அவ்வளவு ஆத்திரம் இருப்பது தவறு. தயவுசெஞ்சு என்னை நம்புங்க. உங்க மனைவியைக் கொன்றவன் நானில்லை. பொய்யான ஒரு பழியை நான் ஏற்க விரும்பலை. அதனால்தான் உண்மையைச் சொல்வதற்கு வந்தேன். என்னை நம்புங்க...” படபடவென்று பேசிக்கொண்டே போனான், விஜயபாஸ்கர்.

## குறள்!

“உண்க வயிறார;
உண்டபின் காசு
தருக அதற்குத் தக.”
—விளாத்திகுளத்திலுள்ள ஒரு ஓட்டலில் காணப்பட்ட புதுக் குறள்!

ரமணிக்கு அவன் சொன்ன விஷயங்களை ஜீரணிப்பதற்கே நீண்ட நேரம் பிடித்தது.

எதுவும் பேசாமல் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

விஜயபாஸ்கரும் ரமணியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நீண்டநேர யோசனைக்குப் பிறகு ரமணி பேசினார்.

“விஜயபாஸ்கர்! நீதான் என் மனைவியைக் கொன்னேன்னு உன் மேல எனக்கு ஆத்திரம் இருந்தது. உண்மைதான். ஆனா இப்போ உன் பேச்சை நம்புறேன். நீ என் மனைவியைக் கொல்லாமல் இருந்திருக்கலாம். அப்படின்னா எவனோ ஒருத்தன் கொன்னிருக்கான். அந்த எவனோ ஒருத்தனைக் கண்டுபிடிச்சே தீரணும். அதுக்கு உன் ஒத்துழைப்பு வேண்டும்.”

“சொல்லுங்க சார்! நான் என்ன பண்ணணும்?”

சிந்தனையில் தெளிவு ஏற்பட்டவரைப் போல் சொன்னார், ரமணி.

“என்னிடம் இந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு அடுத்து என்ன செய்ய நினைத்தாய்?”

“நேரே போய் காளியிடம் முறையிடப் போகிறேன். அவ

எனக்குக் கட்டளை தருவா."

"முட்டாள்தனமாப் பேசாதே விஜயபாஸ்கர். நீ தப்பிச்சாச்சுன்னு தெரிஞ்ச உடனே போலீஸ் முதல் வேலையா அந்தக் கோவிலுக்குத்தான் போய் இருப்பாங்க..."

விஜயபாஸ்கர் விழித்தான்.

"சார்!"

"ஆமா. என் பேச்சைக் கேளு... எனக்கு நீ உதவி செய்யுறதா வாக்குக் கொடுத்திருக்கே... அதோடு உன்னையும் காப்பாத்திக்கணும். நீ பேசாமல் இங்கேயே இருந்திடு. என் மனைவியைக் கொன்ன கொலைகாரனைப் பிடிச்ச உடனே உன் தண்டனைக் குறைப்புக்கு நான் எல்லா விதங்கள்லேயும் உதவுறேன்."

"இங்கே எப்படி சார்?"

"காரணமாத்தான். நீ ஜெயில்ல இருந்து தப்பிச்சிட்டதால எனக்கு ஆபத்துன்னு போலீஸ் நினைப்பாங்க. நீ என் பாதுகாப்பில் இருப்பேன்னு அவங்க கற்பனைகூட செய்ய மாட்டாங்க. அதனால இதுதான் உனக்குப் பாதுகாப்பான இடம்."

சிறிது நேர யோசனைக்குப் பிறகு திடீரென்று கேட்டான், விஜயபாஸ்கர்: "எல்லாம் சரி. உங்க மனைவியின் கொலைகாரனைப் பிடிக்க நான் எந்த விதத்தில் உதவ முடியும்?"

"நல்ல கேள்வி. தப்பிச்ச விஷயம் வெளியான உடனே உண்மையான கொலைகாரனால் அமைதியா இருக்க முடியாது. நிச்சயமா அவன் ஏதாவது செய்ய முற்படுவான். அப்போதான் அவனைப் பிடிக்க முடியும்."

வாசலில் ஜீப் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

ரமணி உஷாரானார்.

"போலீஸ்தான்னு நினைக்கிறேன். ஒண்ணு செய் விஜயபாஸ்கர். நீ மாடிக்குப் போயிடு. அங்கே ஒளிஞ்சுக்கோ. நான் நைசா பேசி இவங்களை அனுப்பிட்டு வர்றேன்."

"சார்..."

"இப்போ எதுவும் பேச நேரமில்லை. சீக்கிரம் போ" என்று அவனை மாடிப் படிகளில் துரத்திவிடவும், அழைப்பு மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

அந்தச் சத்தத்தால் விழித்தெழுந்த ராமையா, வேகமாக சமையலறையில் இருந்து வெளியே வந்தான். ரமணியைப் பார்த்ததும் தயங்கினரன்.

"முதலாளி! இன்னும் தூங்கலியா?"

அவன் பக்கமாகத் தன் சிவந்த விழிகளைத் திருப்பிய ரமணி, "இன்னும் இல்லை. சூடா டீ போடு. மூணு நாலு தம்ளர் போடு" என்றவராக வாசல் கதவுப் பக்கமாகத் திரும்பி நடந்தார்.

ராமையா அவரையே சிறிது ரேம் உற்றுப் பார்த்துவிட்டு சமையலறைக்கு நடந்தான்.

கதவைத் திறந்த ரமணி, "அலோ அருண்! என்ன இந்த நேரத்தில்?" என்றார், குரலில் வியப்பைக் காட்டி. அப்புறம் தான் துணை கமிஷனர் கோபாலைப் பார்த்தார். "வாங்க சார்" என்று இருவரையும் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

"என்ன... நீங்க தூங்கவே இல்லையா?"

"எப்படி சரியாச் சொன்னீங்க?" என்று கேட்டபடியே அவர்களை உட்காரச் சொன்னார்.

உள்பக்கம் திரும்பி, "ராமையா! மூணு டீ" என்று குரல் கொடுத்தார்.

அவர்கள் உட்கார்ந்தார்கள்.

"நீங்க தூங்கலைன்னு உங்க கண்கள் சொல்லுதே... என்ன இன்னும் கவலையா? எவ்வளவு பெரிய வக்கீல் நீங்க?" என்றார்

கோபால், அவரை உற்சாகமூட்டும் குரலில்.

"சும்மா கண்ட கண்ட சிந்தனையா வந்திட்டிருந்தது. பேசாமல் இந்த ஊரைவிட்டேகூடப் போயிடலாமான்னு தோணுது..."

"இல்ல ரமணி... நீங்க ஒரு பத்து நாள் ஊட்டி, கொடைக்கானல்னு போய் ஓய்வு எடுத்துட்டு வந்தீங்கன்னா எல்லாம் சரியாயிடும்."

"போகணும் சார்."

"போங்க. ஆனா, இன்னும் ஒரு வாரம் கழிச்சுப் போங்க" என்றபடி அருணைப் பார்த்தார், கோபால்.

"ஏன்?"

அதற்குள் டீ வந்தது.

"கொஞ்சம் தைரியமா இருங்க. விஜயபாஸ்கர் தப்பிச்சுட்டான்..."

கோபால் சொல்லி முடிக்கவும் சட்டென்று பொய்யாய் நடுங்கியது, ரமணியின் கை. டீ சற்று கீழே சிந்தியது.

"நீங்க எதற்கும் பயப்படாதீங்க ரமணி. உங்களுக்கு நாங்க பாதுகாப்பு தர்றோம். அவனை நிச்சயமா பிடிச்சிடுவோம். நீங்க கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க. கூடியவரை தனியே வெளியில் போவதைத் தவிருங்க. இதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தோம்."

ரமணி விரக்தியாய்ப் புன்னகைத்தார்.

"என்ன சார் நடக்கும்? மிஞ்சி மிஞ்சிப் போனால் அவன் என்னைக் கொல்வான். செய்யட்டும் என் காஞ்சனாவிடமே நானும் போயிடுறேன். எனக்கு எதுவும் வேண்டாம்."

உண்மை புரியாத அவர்கள், அவரைத் தேற்றி தைரியம் சொல்லிவிட்டு விடைபெற்றார்கள்.

காக்கிச்சட்டைகள் போனதும் கதவைப் பூட்டிவிட்டு

மாடிக்கு விரைந்தார், ரமணி.

"விஜயபாஸ்கர்... விஜயபாஸ்கர்... அவங்கபோயிட்டாங்க" என்று குரல் கொடுத்தார், கிசுகிசுப்பாக.

பதிலே இல்லை.

தன் அலுவலக அறை மட்டுமின்றி மாடி முழுதும் தேடினார். மாடியிலிருந்து தோட்டத்துப் பக்கமாகப் போகும் படிகளில் இறங்கிப் பார்த்தார். எல்லா இடங்களிலும் சுற்றியும் எங்கும் அவன் இல்லை.

இப்போது ரமணிக்கு உண்மையாகவே கைகள் நடுங்கின.

## 15

அடர்ந்த இரவு.

வீட்டு மாடியில் ஆளுக்கொரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தனர் அருணும், தேவியும்.

சில்லென்று காற்று வீசியது. அது உடல்களை வருடிவிட்டு சொல்லில் அடங்காத சுகத்தைத் தந்துகொண்டிருந்தது.

தேய்பிறையின் ஒளியோடு நட்சத்திரங்களும் ஏராளமாய்க் கண்சிமிட்டின.

தேவி, பூரித்த முகத்தோடு தேவதையாக இருந்தாள்.

நிறை மாதம் என்பதால் வயிறு நிறைந்து பெருத்திருந்தது. அவள் உடலிலும், முகத்திலும் பல மாறுதல்களை ஏற்படுத்தி இருந்தது.

இமைக்காமல் அவளையே பார்த்துக்கொண்டு இருக்க வேண்டும் என்று தோன்றியது, அருணுக்கு.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க?" என்று மெல்லிய குரலில்,

இமைகளைப் படபடத்தபடி கேட்டாள் தேவி.

"இல்லை. நீ ரொம்ப அழகா இருக்கிறே" என்றான், அருண்.

தேவி கிணுகிணுத்த குரலில் சிரித்தாள்.

"இது என்ன புதுக் கண்டுபிடிப்பு, இத்தனை நாட்களுக்குப் பிறகு."

அருண் பதில் சொல்லத் தெரியாமல் அசடாகச் சிரித்தான்.

"டாக்டர் என்ன சொன்னார்?"

"இன்னும் பத்து பதினைந்து நாளுக்குள் பிரசவம் ஏற்படலாம்னு சொன்னார்."

அவளையே சில விநாடிகள் பார்த்திருந்துவிட்டு

## திருமண வயது



**பெ**ண்கள், *21* வயது நிரம்பிய பின் திருமணம் செய்துகொள்வது நல்லது. ஏனென்றால், அதற்குமுன் பெண்களுக்கு மன வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் போதுமான அளவு இருப்பதில்லை. கருச் சிதைவு ஏற்படலாம். குழந்தை குறைப் பிரசவம் ஆகவோ அல்லது வளர்ச்சி குறைவாகவோ பிறக்க வாய்ப்பு உள்ளது.

தாய்க்கு, இரத்த சோகை, இரத்தக்கொதிப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். இரத்தக்கொதிப்பு அதிகமாகும் போது வலிப்பு ஏற்பட்டு தாயின் உயிருக்கு ஆபத்து நேரலாம். பிரசவத்தின்போது பிறப்புபாதை வளர்ச்சிக் குறைவு காரணமாக குழந்தையை பிரசவிக்க முடியாமல் அறுவை சிகிச்சை செய்ய நேரிடலாம். தாய்க்கும் சேய்க்கும் இதுபோன்ற பல சிக்கல்கள் உள்ளதால் சிறுவயதில் திருமணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.



**போலீஸ் பாலம்**

**வி**ருதுநகர் குறுக்குச் சாலையிலிருந்து, பழைய பேருந்து நிலையத்துக்குப் போக போலீசார் ஒரு பாலம் அமைத்துத் தந்துள்ளனர். இதற்கு "போலீஸ் பாலம்" எனப் பெயர்!

சொன்னான், அருண்: "தேவி... நீ பாவம்!"

"ஏன்?"

"என் பிள்ளையைப் பத்து மாதமா சுமந்திட்டு இருக்கிறே! பிரசவ நேரத்தில் வலி ரொம்ப இருக்குமாமே, எப்படித் தாங்குவே?"

அவள் குதூகலமாய்ச் சிரித்தாள்.

"என் ஆம்பளை அசடே! எல்லா ஆம்பளைக்கும் இந்தக் கவலைக்கு மட்டும் குறைச்சல் இல்லை."

அருண் வானத்தை வெறித்தான். நட்சத்திரங்கள் விடாமல் மினுக்கிக்கொண்டிருந்தன.

"தேவி! நட்சத்திரங்களைப் பாரேன். எந்த ரகசியத்தைச் சொல்வதற்காக இந்த நட்சத்திரங்கள் அடிக்கடி கண் சிமிட்டுகின்றன?"

"என்னாச்சு உங்களுக்கு இன்னிக்கு? திடீர்னு கற்பனை மூடு வருது?"

"உன்னைப் பார்த்திட்டிருந்தா எனக்கே கவிதை எழுதணும்னு கை துருதுருக்குதே..."

தேவி சிரித்தாள்.

"ஏன் தேவி, நான் கவிதை எழுதினா நல்லா இருக்காதா?"

"என்ன இருந்தாலும் விஜயபாஸ்கர் கனவில் காளி வந்து சொன்ன கவிதைக்கு ஈடாகுமா?"

அருண் ஒரு நிமிடம் திடுக்கிட்டான்.

"அவனும் தப்பிச்சுப் போய்... சே! பெரிய தலைவலியா இருக்கு..."

"காஞ்சனா டைரியில் எழுதியிருந்த விஷயம் பற்றி ஏதாவது விசாரிச்சீங்களா?"

“உம்... விசாரித்தேன்! ரமணி வேறு ஒரு பெண்ணிடம் தகாத உறவு வைத்திருப்பது பற்றி காஞ்சனா சூசகமா எழுதியிருந்ததுதான் இந்த வழக்கில் மற்றொரு கோணம் பற்றி எனக்குத் தெரிய வைத்தது.”

“அந்தப் பெண்ணை எப்படிக் கண்டுபிடிப்பீங்க?”

“ரமணியின் நண்பர்களில் உளறுவாயன் ஒருத்தன் இல்லாமலா போயிடுவான்? அவளையும் அடையாளம் கண்டுபிடிச்சிட்டேன்.”

“அவளைப் பார்த்தீங்களா?”

“பார்த்தேன்.”

“பழக்கம் எப்படி ஏற்பட்டதாம்?”

“வழக்கு விஷயமா ஏற்பட்ட தொடர்புதான். வழக்கை ஜெயிச்சுக் கொடுத்திருக்கார். அதுக்கு நன்றி அது இதுன்னு தொடங்கி... அப்படியே தொடர்பு நீடிச்சுப்போச்சு. விஷயம் ஆறு ஏழு மாதம் கழிச்சு காஞ்சனாவுக்குத் தெரியவந்திருக்கு.”

“அவ பேர் என்ன?”

“நிர்மலா.”

“அவ வீட்டில் யாரெல்லாம் இருக்காங்க?”

“நிர்மலா, அவளோட மாமன், அவ அம்மா மூணு பேர்.”

“அவள் மாமன் யார்?”

“உன் சந்தேகம் புரியுது. அவன் அப்பாவி.”

“நிர்மலாவை நல்லா விசாரிச்சீங்களா?”

“உம்... தன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தி இருக்கா. ஆனா, இப்படி நடக்கும்னு தெரியாது என்று அழுதா. அவளைச் சந்தேகப்பட முடியலை.”

“அவ வீடு எங்கே இருக்கு?”

“சொன்னா ஆச்சரியப்படுவே. கோரிப்பாளையத்தில்.”

“வாவ்...”

“சம்பவத்தன்னிக்குக்கூட அவளைத் தேடித்தான் காஞ்சனா

போயிருக்கணும். டிரைவர் பார்வையில் இருந்து தப்பு வதற்காக பஸ்சில் ஏறியிருக்கலாம். ஆனா, அன்னிக்கு நிர்மலா வீட்டுக்கு அவள் போகலை."

"அதுக்குள் அசம்பாவிதம் நடந்திருக்கணும்."

"உம்... பிரேத பரிசோதனை அறிக்கையும் அதுக்கு ஒத்து வருது. காஞ்சனா பதினொன்றரை மணிக்கு கோரிப் பாளையத்தில் இருந்திருக்கா. அவள் மரணம் நடுப்பகலில் நடந்திருக்கலாம்னு அறிக்கையில் தெரியுது."

"அப்போ உங்க சந்தேகம் யார் மேலே?"

"தெளிவா சொல்ல முடியலை."

"பச்சையா கேட்கவா? ரமணி மேல உங்களுக்கு சந்தேகம் இருக்கா?"

அருண் வியப்பாய் அவளைப் பார்த்தான்.

"இல்லைன்னு சொல்ல முடியாது. ஏன்னா துப்பறியும் நாய் மோப்பம் பிடிச்சப்போ ரமணி வீட்டுக்குத்தான் முதலில் போச்சு."

"அப்படியா?"

"இரண்டு முறை முயற்சி பண்ணினோம். இரண்டு முறையும் அங்கேதான் போச்சு. ரமணியிடம் துளைத்துத் துளைத்துக் கேட்டோம். ஊகூம்... பிடிவாதமாக மறுத்துட்டார். அவர் வீடு முழுக்க சல்லடை போட்டாச்சு. தடயம் ஏதும் சிக்கலை. அவருக்குத் தெரியாமல் வீட்டு வேலையாள்களிடமும் விசாரிச்சிட்டோம். பிடி கிடைக்கலை."

கொஞ்ச நேரம் மவுனமாக இருந்த தேவி கேட்டாள்: "அப்ப என்ன பண்ணப்போறீங்க?"

"ரமணியைப் பிடித்தால் எல்லா கேள்விகளுக்கும் விடை கிடைத்துவிடும்."

"அந்த முயற்சிக்கு அப்புறம் போகலாம். முதலில் விஜய பாஸ்கரைப் பிடிங்க. பத்திரிகைகளில் போலீஸ் பேரு நாறுது."

"உண்மைதான் தேவி! அவனைப் பிடிச்சே தீரணும்."

"ஏதாவது ஏற்பாடு பண்ணி இருக்கீங்களா?"

அருண் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"யோசிச்சது போதும். வாங்க போய்ப் படுக்கலாம். இவ்வளவு நேரமா இதைப்பற்றி பேசிட்டிருந்தோம்னு மாமிக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான். கன்னாபின்னான்னு சத்தம் போடுவாங்க" என்றபடி மெல்ல எழுந்தாள், தேவி.

அருண், அவள் போன பிறகும் சிறிது நேரம் அதே சிந்தனையில் இருந்துவிட்டு ஒரு முடிவுக்கு வந்தவனாக எழுந்தான்.

மறுநாள் மாலை.

அருணுக்கு அடுத்தடுத்து இரண்டு தொலைபேசி அழைப்புகள் வந்தன.

முதலாவது சற்றும் எதிர்பார்க்காத செய்தி.

"வாவ்..." என்று உற்சாகமானான்.

அடுத்து அம்மா சாந்தா பேசினாள்.

"அருண்! தேவியைக் காணோம்ப்பா... அக்கம்பக்கம் முழுதும் பார்த்துட்டேன். பயமா இருக்கு. உடனே வாப்பா..."

'டங்'கென்று ரிசீவரைக் கீழே நழுவ விட்டான், அருண்.

## 16

முன்தினம் இரவில் தேவியுடன் பேசிக்கொண்டிருந்த போது செய்த தீர்மானத்தின்படி காலையில் அருண் ஒரு வேலை செய்தான்.

ரமணி மீது இருக்கும் சந்தேகம் உறுதியாக வேண்டும் என்றால் இருக்கின்ற ஒரே ஆதாரத்தைச் சோதித்துப்

பார்த்துவிடுவதுதான் வழி.

அந்த ஒரே ஆதாரம் காஞ்சனாவின் பிணத்தைக் கைப்பற்றியபோது கிடைத்த ரேகை. குறிப்பாக விஜய பாஸ்கரோடு ஒத்துப்போகாத ரேகை. அது ரமணியின் ரேகையோடு ஒத்துப் போகிறதா? என்று பார்க்க வேண்டும்.

அதற்கு ரமணியின் ரேகை தேவை.

கூடியவரை ரமணியே அறியாத விதத்தில் அந்த ரேகையை எடுப்பது என்று தீர்மானித்துக்கொண்டவனாக ரமணியின் வீட்டுக்குச் சென்றான்.

"வணக்கம்" என்றபடியே உள்ளே நுழைந்தான்.

ரமணியின் முகத்தில் முன்பைவிட இப்போது அதிகமாகக் கலவர உணர்வு இருந்தது. இது காஞ்சனா மறைந்த சோகம் மட்டும் இல்லை என்று தனக்குள் எண்ணிக்கொண்டான், அருண்.

ரமணி சிரித்தார் என்பதை விடவும் சிரிக்க முயன்றார் என்பதே சரியாக இருக்கும்.

"நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன் அருண். உள்ளே வாங்க. உட்காருங்க" என்றார்.

ஆசுவாசமாக உட்கார்ந்த அருண், "என்ன முடிவு?" என்று கேட்டான்.

"இங்கே உள்ள எல்லாவற்றையும் மறந்துட்டு வடக்கே போயிடலாம்னு இருக்கேன். அதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கிட்டேன்."

அருண் மவுனம் சாதித்தான்.

டீ போட போனான் ராமையா.

"தண்ணி கொண்டு வா ராமையா" என்றான், அருண்.

"எனக்கும்" என்றார், ரமணி.

அடுத்த சில நிமிடத்தில் அருணின் மோட்டார் சைக்கிள் தடயவியல் பிரிவுக்குப் பறந்தது.

"சந்திரன்! காஞ்சனா பிணமாகக் கிடந்த போது பீடத்திலும் சூலத்திலும் கிடைத்த கைரேகை இருக்கில்லையா?"

"இருக்கு சார்."

"இந்த தம்ளரில் இருக்கிற ரேகை அதோடு ஒத்துப் போகுதான்னு பார்த்துச் சொல்லணும்."

சந்திரனின் தகவலுக்காகக் காத்திருந்தான், அருண். மதிய உணவுக்குகூட வீட்டுக்குப் போகவில்லை.

ஆனால், வேறு தொலைபேசிகள்தான் வந்தன.

அதில் ஒன்றுதான், தேவி காணாமல் போய்விட்டதாக வந்த தொலைபேசி.

ஒரே ஒரு நிமிடம்தான் அருண் அதிர்ச்சியில் இருந்தான். மறுநிமிடம் சுதாரித்துக்கொண்டான். உடனடியாக மோட்டார் சைக்கிளில் விரைந்தான்.

வீட்டுக்குப் போனான். அம்மா சாந்தா பேயறைந்தாற் போல் இருந்தாள். அருணைக் கண்டதும் 'ஓ'வென்று கதறி அழுதாள்.

அருணுக்குப் பதற்றத்தில் அழுகை வரவில்லை.

"சொல்லும்மா... என்ன ஆச்சு?"

அழுகையின் ஊடே அம்மா சொன்னாள்—

"காலையில பத்தரை மணிக்கு தெரு முனையில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குப் போயிட்டு வர்றேன்னு போனா. மத்தியானம் வரை காணோம். யாராவது தோழி வீட்டுக்குப் போயிருப்பாள்னு நினைச்சேன். சாயங்காலமாகியும் வரலை. பயமா இருந்தது. அதான் உனக்குப் போன் பண்ணினேன்"

என்று குமுறினாள்.

"அம்மா! தேவி காணாமல் போன விஷயத்தை யாரிடமும் சொல்லாதே. அவள் பத்திரமா கிடைக்கணும்னா ஒரே வழி அதுதான்."

விசும்பலின் ஊடே கேட்டாள், சாந்தா:

"பயமா இருக்குடா. அந்தக் கொலைகாரன் வேறு ஜெயில்ல இருந்து தப்பிச்சுட்டான். அவனால் தேவிக்கு ஆபத்து எதுவும்... நினைக்கும்போதே பகீர்ங்குதுடா..."

அருண் சிலையாக நின்றான்.

"ஏதாவது சொல்லுடா. பயமா இருக்கு."

"ஒண்ணு மட்டும் உறுதிம்மா. தேவிக்கு விஜயபாஸ்கரால ஆபத்து கிடையாது."

"எப்படி சொல்றே?"

"ரகசியமா உனக்குள்ளே வச்சுக்கோ. விஜயபாஸ்கர் இன்னிக்கு பிடிபட்டுட்டான். உன் போன் வர்றதுக்கு ரெண்டு நிமிடம் முன்னாலதான்."

சாந்தா உறைந்தாற்போல் நின்றாள்.

## 17

சந்திரனைப் பார்க்க விரைந்துகொண்டிருந்த அருணின் மனம் அடுத்து செய்யவேண்டிய காரியங்களை வேக வேகமாகப் பட்டியல் போட்டுக்கொண்டிருந்தது.

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுப் படியேறினான்.

சந்திரன் புன்னகைத்தபடியே வரவேற்றான்: "ரெண்டு தடவை போன் பண்ணிட்டேன். நீங்க கிளம்பிப்

போயிட்டீங்கன்னு சொன்னாங்க. இங்கேதான் வருவீங்கன்னு புரிஞ்சுகிட்டேன்."

"சரி... ரிசல்ட் என்ன ஆச்சு?" என்று பரபரத்தான் அருண்.

"நீங்க கொடுத்த தம்ளரில் உள்ள ரேகையும் அந்தக் கோவில் பீடத்தில் இருந்த ரேகையும் ஒண்ணுதான்."

"உடனே கைது பண்ணுங்க" –துணை கமிஷனர் கோபால் உத்தரவிட்டார்.

"நானும் முதலில் அப்படித்தான் நினைத்தேன் சார். ரமணியை உடனடியா கைது பண்ணுறதுதில் ஒரு பிரச்சினை இருக்கு."

"என்ன? சொல்லுங்க."

"என் மனைவி..." என்று அருணுக்குத் தொண்டை அடைத்தது. குமுறி அழுதான்.

"தேவி... தேவி..." என்று அரற்றினான்.

உள்ளுக்குள் உடைந்து நொறுங்கினான்.

கோபால், முதலில் வியப்பையும், பின் வருத்தத்தையும் வெளிப்படுத்தினார்.

"அருண்!" என்று அவன் பிடரியில் தட்டிக் கொடுத்தார். எழுந்து போய் குளிர்ந்த நீர் கொண்டுவந்து நீட்டினார்.

"அருண்! எவ்வளவு உறுதியானவன் நீ. நீயா இப்புடி அழுறே? ஆச்சரியமா இருக்கு" என்று குரலில் வியப்பு காட்டி தேற்றினார்.

அருண் பதில் ஏதும் பேசாமல் தண்ணீரை வாங்கி குடித்து முடித்தான். சிறிது நேரம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். முகத்தைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்தான். அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தான்.

"சாரி சார்" என்றான்.

"பரவாயில்லை" என்றார் கோபால். தொடர்ந்து அவரே பேசினார். "அருண்! உன் மனைவி காணாமல் போனதுக்கும் விஜயபாஸ்கருக்கும் சம்பந்தம் இல்லைன்னு ஆயிடுச்சு இல்லையா?"

"ஆமா சார். அவன்தான் அதற்குமுன்பே பிடிபட்டு விட்டானே."

"அப்புறம் என்ன? மிச்சமிருப்பது காஞ்சனாவைக் கொன்றவன்தானே? அது ரமணிதான் என்பது கைரேகை விஷயத்தில் உறுதி ஆயிடுச்சு. ரமணியைப் பிடித்துவிட வேண்டியதுதானே?"

"நானும் யோசிச்சுப் பார்த்தேன் சார். பட்டப்பகல்ல தேவி காணாமல்போயிருக்காள்னா அவளுக்குத் தெரிஞ்ச யாரோ கூப்பிட்டுத்தான் போயிருக்கணும்."

கோபால் யோசனையில் ஆழ்ந்தார்.

"நாம் தவறான திசையில் பயணம் செய்துகொண்டிருக்கிறோமோன்னு தோணுது. தேவி விஷயம் தனி வழக்குன்னுதான் படுது."

"ஆமா சார். நாகம்மா கொலையைச் செய்தது, விஜயபாஸ்கர். அவன் இப்போ போலீஸ் காவலில். காஞ்சனா கொலையை ரமணி செய்த மாதிரி இப்ப தடயங்கள் கிடைச்சிட்டிருக்கு. இப்போதைக்கு ரமணியை கண்காணித்தாக வேண்டும். அதற்காக அவசரப்பட்டு அவரைக் கைது செய்ய வேண்டாம். ஒருவேளை தேவி அவரால் கடத்தப் பட்டிருந்தால் அவளுக்கு ஆபத்தாக அது முடியலாம்."

"அப்போ ஒண்ணு செய்யலாம் அருண். விஜயபாஸ்கர் பிடிபட்ட விஷயத்தை வெளிப்படுத்த வேண்டாம். தேவி காணாமல் போன விஷயமும் இரகசியமாகவே இருக்கட்டும். தேவியைக் கடத்தியவன் யாராக இருந்தாலும் அந்தக் காளி கோவிலுக்கு பயன்படுத்தத்தான் பார்ப்பான். அதுவும்

நிச்சயமாக அமாவாசை வரை பொறுத்திருப்பான். அதற்கு இன்னும் இரண்டு நாள் இருக்கு. அதுவரைக்கும் தேவிக்கு ஆபத்து கிடையாது. அதில் சந்தேகமில்லை. அமாவாசை அன்று கோவில் அருகேயுள்ள மரங்களின் மீதேறி ஒளிந்திருப் போம். கையும் களவுமாகப் பிடித்துவிடலாம். குறிப்பாக தேவியைப் பத்திரமாக மீட்கலாம்."

அருண் மென்று விழுங்கினான்.

இது மிகப்பெரிய 'ரிஸ்க்' என்று எச்சரித்தது அவனுடைய உள்ளுணர்வு.

'அவ்வளவு நேரம் வரை பொறுத்திருக்காமல் அதற்கு முன்பே தேவியைக் கண்டுபிடித்துவிட முடியாதா? அது வரை தேவி எப்படி இருப்பாளோ?' –நினைத்தவன் கலங்கினான்.

கடைசியில் "சரி சார்" என்றான் மெல்லிய குரலில்.

"இப்போ நாம விஜயபாஸ்கரைப் பார்க்கப் போக லாமா?"

அவ்வளவுதான். இருவரும் விஜயபாஸ்கரைப் பார்க்கப் போனார்கள்.

திடீரென்றுதான் ஞாபகம் வந்தது அருணுக்கு.

"சார்... ரமணி சீக்கிரமே இந்த ஊரைவிட்டே போகப் போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்."

"ரமணிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தம் இருப்பதாக நினைக்கிறாயா?"

அந்த நிமிடத்தில் அருணால் பதில் சொல்ல முடிய வில்லை.

ஆனால், விஜயபாஸ்கரிடம் அந்தக் கேள்விக்கு பதில் மட்டுமல்ல; வழக்கின் முடிவும் இருந்தது.

# 18

**தா**ன் தப்பி ஓடி ரமணியின் வீட்டில் சரணடைந்த கதையைச் சொன்னான், விஜயபாஸ்கர்.

"நான் மாடியில் இருந்தபோது நீங்கள் இருவரும் கீழே வந்திருந்ததைப் பார்த்தேன். ரமணி சார்தான் என்னை ஒளிந்திருக்கச் சொன்னார். கொஞ்ச நேரம் அங்கே இருந்தேன். ஒருவேளை நீங்கள் முழு வீட்டையும் சோதனை போடு வீர்களோ என்று திடீரென்று பயம் வந்தது. சுற்றிலும் பார்த்தேன். படிக்கட்டுகளில் இறங்கி தோட்டத்துப் பக்கம் போய்ச் சேர்ந்தேன்."

"அப்புறம்...?"

சற்றுத் தள்ளி தூக்கக் கலக்கத்துடன் வந்த டிரைவர் என்னைப் பிடித்துக்கொண்டார். 'இந்த ரமணியைப் போய் நம்புறியே... இந்த ஆளே ஒரு கொலைகாரன். தன் மனைவியையே கொன்றவன். பழியை உன் மேல் போட்டு நல்லா நாடகம் ஆடிட்டான்' என்றார்.

நான் கலங்கினேன். டிரைவர் தன் வீட்டுக்கே கூட்டிப் போனார். அங்கே யாரும் இல்லை. எனக்கு எல்லா வசதிகளும் செய்துகொடுத்தார். முதலில் என்னை போலீசில் சரணடையச் சொல்லி வற்புறுத்தினார். என் கொழுப்பால் அந்த வீட்டைவிட்டு வெளியேறினேன். அப்போதுதான் நான் பிடிபட்டுட்டேன்."

விஜயபாஸ்கரின் இந்த வாக்குமூலம் அருணையும் கோபாலையும் அதிகமாய்க் குழப்பிவிட்டது.

"டிரைவர் என்ன சொன்னான்? ரமணி கொலைகாரன் என்றா?"

"ஆமா."

"ரமணி என்ன சொல்லி உன்னைத் தன்னோடு இருக்கும் படிச் சொன்னார்?"

"அவருடைய மனைவியைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க உதவும்படிச் சொன்னார்."

அருணும் கோபாலும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"டிரைவர் வீடு எங்கே இருக்கு?"

அடையாளம் சொன்னான்.

விஜயபாஸ்கரைக் காவலில் வைத்துவிட்டு இருவரும் பரபரப்பாகக் கிளம்பினார்கள்.

கதிரவன் விடைபெற்றுக்கொண்டு கிளம்பிவிட்ட மாலை நேரம்.

இருள் போர்வை கிட்டத்தட்ட முழுதுமாய் மூடியது.

அவர்கள் டிரைவர் வீட்டை அடைந்தபோது மணி ஏழு.

கதவில் பூட்டு தொங்கியது.

அது தனித்து இருந்த வீடு.

"எங்கே போயிருப்பான்?"

"சார்... பூட்டை உடைச்சிடலாமா?"

அவர்கள் யோசித்துக்கொண்டிருக்கையில் அவசரமாக அங்கு வந்து நின்றது, ரமணியின் கார்.

ரமணியிடம் பயத்தின் எச்சங்கள்.

அருணும், கோபாலும் தங்களுக்குள் புன்னகைத்துக் கொண்டனர்.

"உங்களுக்காகத்தான் காத்திருக்கிறோம். உங்க மனைவி யைக் கொன்றவனைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டீங்க இல்லையா? அதற்காகத்தானே ஜெயில்ல இருந்து தப்பிச்சு

வந்த விஜயபாஸ்கருக்கு சட்டவிரோதம்னு தெரிஞ்சும் அடைக்கலம் கொடுத்தீங்க?"

ரமணி அதிர்ந்தார். தர்மசங்கடத்தில் நெளிந்தார்.

உள் அறையில் ஒளிந்து இருந்த டிரைவர் இழுத்து வரப்பட்டான்.

## 19

"நான்தான் அம்மாவைக் கொன்னேன்" என்றான், டிரைவர்.

"வீட்டுல ஒரு தடவை பணம் திருடிட்டேன். அதை அம்மா கண்டுபிடிச்சிட்டாங்க. மன்னிப்பு கேட்டேன். எச்சரிக்கை செஞ்சு விட்டுட்டாங்க. ஆனா, அதுக்கப்புறம் என்னை ரொம்பவே தீவிரமா கண்காணிச்சாங்க. செய்யுறதை எல்லாம் நோண்டி நோண்டிப் பார்த்தாங்க. உங்களைப் பொருத்தமட்டில் எனக்கு பிரச்சினையே கிடையாது. ஆனா, அம்மா பெரிய பிரச்சினை ஆயிடுவாங்கன்னு பட்டுது. எனவேதான் இப்படி ஐடியா பண்ணினேன்."

"என்ன செய்தே?"

"அம்மா காலில் விழுந்து மன்னிப்பு கேட்டேன். நான் திருடியதை ஒப்புக்கொண்டு எல்லா பணத்தையும் ஒப்படைத்து விட்டு உங்களிடம் சொல்லிவிட வேண்டாம் என்று வேண்டிக்கொண்டேன். அதன்பிறகு திருந்தியவன் போல் நல்லபடியாக நடித்தேன். அவர்களைத் தீர்த்துக்கட்ட நல்ல சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்."

"அப்புறம்...?"

"அப்போதுதான் நாகம்மாவின் நரபலி விஷயம் பற்றி

பரவலான பேச்சா இருந்தது. அம்மாவைக் கடத்திட்டுப் போவதோ, தீர்த்துக்கட்டுவதோ அந்தக் கோவிலில் கொண்டு போய்ப் போடுவதோ எனக்கு ஒரு சிரமமான வேலையாகவே இருக்கவில்லை. ஆனா, விஜயபாஸ்கர் கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்ததும் நிம்மதியாக இருந்தேன். அவன் தப்பித்ததும் எனக்கு பயம் வந்தது. கடைசியில் அவனே என் பிடிக்குள் வலியவந்து விழுந்தது என் அதிருஷ்டம் என்றே நினைத்தேன். விஜயபாஸ்கர், அம்மாவை தான் கொல்லவில்லை என்று உங்களிடம் சொல்லிவிட்டதாகச் சொன்னான். இனி பிரச்சினை இன்னும் விசுவரூபம் எடுக்கும் என்று எனக்குப் பட்டது."

"அப்புறம் என்ன செய்தே?"

"முதலில் விஜயபாஸ்கரை நம்ப வைத்து என் வீட்டுக்குக் கொண்டுசென்றேன். தேவி கர்ப்பமாக இருப்பது எனக்குத் தெரியும். நான் தப்பித்து நிம்மதியாக இருக்க எனக்கு வேறு வழி தெரியவில்லை. அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து அன்றாட செயல்பாடுகளை அறிந்துகொண்டேன். என்னை அவர்களுக்கு நன்றாகவே தெரியும். அதனால் அவர்களைக் கடத்துவது எனக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. எளிதாக முடிந்துவிட்டது. அமாவாசை அன்று தேவியை அதே பாணியில் கொன்றுவிட்டு விஜயபாஸ்கரையும் கொன்று காளி மீண்டும் அவன் கனவில் வந்து மூன்றாவது பலியையும் கொடுத்துவிட்டு தன்னிடமே வந்துவிடும்படி சொன்னதாக அவனே எழுதுவது போல் கடிதம் ஒன்று எழுதி வைத்து இந்த பிரச்சினையை முடித்துவிடும் எண்ணத்தில் இருந்தேன். இப்படி வழக்கைத் திசை திருப்பிவிட்டால் அப்புறம் நிரந்தரமாக நிம்மதியாக இருக்க முடியும் என்று நினைத்தேன்."

**நா**ற்காலியில் அமர்ந்திருந்த கோபால், அருணையும் அவனருகில் இருந்த தேவியையும் வித்தியாசமாகப் பார்த்தார்.

கோபாலுக்கு வணக்கம் சொன்னாள். அருணைப் பார்த்து

சிநேகமாகப் புன்னகை செய்தாள்.

"எப்படிம்மா இருக்கே?" என்றார், சற்று பதற்றமாய்.

"இங்கே என்ன நடக்குது? எனக்கு எதுவும் புரியவில்லை" என்றாள், குழப்பத்துடன்.

## 20

தேவி பாதுகாப்பாய் மீட்கப்பட்டதை நினைத்து அருண் மலர்ந்த முகத்தோடு இருந்தான்.

"சரியான நேரத்தில் தேவியை மீட்டுட்டோம். விஜயபாஸ்கரும் பிடிபட்டுட்டான். டிரைவரும் சிக்கி விட்டான். இல்லையென்றால் நாம் ரமணியைக் கைது செய்து.... விஷயம் வேறுவிதமாய்ப் போயிருக்கும் இல்லையா?" என்று கேட்டார், கோபால்.

"ஆமா சார். தவறு என்னுடையதுதான். அன்று ரமணி வீட்டில் தண்ணீர் கேட்டபோது ராமையா டீ போடுவதில் பிசியாக இருந்ததால் இந்த டிரைவர்தான் தண்ணீர் கொண்டுவந்து நீட்டினான். ரமணி வாங்கி என்னிடம் கொடுத்தார். என் கவனமெல்லாம் ரமணிக்குத் தெரியாமல் அந்த தம்ளரைக் கொண்டுவருவதில் இருந்ததால் இதனை நான் கவனத்தில் கொள்ளாமல் விட்டது பெரிய பிசகுதான்."

"தவறுகள்தான் நம்மைப் புடம் போடுகின்றன. விஜயபாஸ்கர் தண்டனை அடைந்த பிறகும் இந்த வழக்கு முழுமையா முடியவில்லை என்று மீண்டும் விசாரிக்க நினைத்தாயே அந்த புத்திசாலித்தனம்தான் இந்த வழக்கு நல்லபடியாக முடிவதற்கும் உதவி இருக்கு! உனக்கு நல்ல பெயர் வாங்கித் தந்து இருக்கு. உன் மனைவிக்கு ஊறு ஏதும் நேராம செய்திருக்கு" வெகுவாகப் பாராட்டினார், கோபால்.

"நன்றி சார். ஆனா, ஒரு சின்ன திருத்தம்..."

"என்ன சொல்லு."

"இந்த வழக்கு நல்லவிதமா முடிய நான் காரணம் என்று நீங்க நினைப்பது தப்பு."

"வேறென்ன?"

"இத்தனை பிரச்சினைக்கு மத்தியிலும் கலங்காமல் யோசனைகள் சொன்னவள், தன்னை மீட்க நான் வருவேன் என்று கர்ப்பத்துடன் கண்ணீர் ததும்ப காத்திருந்தாளே என் தேவி... அவள்தான் சார் காரணம்."

தேவியின் முகத்தில் வெட்கம் கலந்த பெருமைப் புன்னகை மின்னல் கீற்றாய் பளிச்சிட்டது.

கோபால் விடைபெற்றார்.

அருண், தேவியின் விழிகளில் திரண்ட கண்ணீரைச் சுட்டுவிரலால் எட்டித் துடைத்தான்.

அவளின் வயிற்றில், தன் வலதுகரத்தைப் பாசமாய் பதித்தான்.

குழந்தை எட்டி உதைத்தது. முட்டி மகிழ்ந்தது.

இப்போது இருவர் மனதிலும் மத்தாப்பூவாய் மகிழ்ச்சிப் பூரிப்பு.

**(முடிந்தது)**

*ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.*